

क्रियासिद्धि सत्वे भवति
VIJAYA PRODUCTIONS Ltd.
அபிமானிகளுக்கு...
சந்தோஷச் செய்தி!
1950-51
விடுதலையாகும்
விஜயாவின்
உன்னதப் படங்கள்...
பாதாள பைரவி
சந்திரஹாரம்
கொல்ல கிருஷ்ணு
"கல்யாணம்
பண்ணிப்பார்!"
தயாரிப்பு- நாகி ரெட்டி-சக்ரபாணி

# அம்புலிமாமா
## பொருள் அடக்கம்

பொருள் அடக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| 1. நன்றியுள்ள சிங்கம் | 10 |
| 2. குயிலே! குயிலே!! | 12 |
| 3. காது பூசை | 13 |
| 4. அதிசயப் பிறவிகள் | 17 |
| 5. உரோமச் செல்வம் | 25 |
| 6. புத்திசாலி வேலன் | 29 |
| 7. சாந்திப் பறவைகள் | 33 |
| 8. குருவின் அருள் | 39 |
| 9. சின்னானின் யுக்தி | 42 |
| 10. ஏன் தெரியுமா? | 47 |
| 11. இந்திர ஜாலம் | 50 |


அம்புலிமாமா ஆபீஸ்
போஸ்ட் பாக்ஸ் நெ. 1686
சென்னை-1


ஆரோக்கியத்திற்கும், ருசிக்கும்
திலக் மார்க்
மிஸ்கி பெருங்காயம்




பூஜைகளுக்கும், கல்யாணங்களுக்கும்




கெடியாரம் மார்க்
கற்பூரத்தை
உபயோகியுங்கள்.


கோபால்ஜீ சாம்ப்ஸி & கோ.
30, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்

# சந்துவின் தீரச்செயல்கள்




தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்




FOR PLEASANT READING &
PROFITABLE ADVERTISING

## Chandamama Group

(HINDI, TELUGU, TAMIL & KANNADA)

**EVERY MONTH ADORNS**
**92,500 HOMES**

*and*

***Enchants Ten Times the Number of Readers throughout India***


★


**Group Page Rs. 350**

★

*Enquire:*

**P. O. BOX 1686, MADRAS-1**


நீதி ஒரு நீலியின்
புன்சிரிப்புக்கு
நெளிந்துவிட்டது...
தர்மம் தலை
வணங்காமல்
போராட்டம் நடத்தி
வெற்றி கண்டது...
22
முதல்
மாடர்ன் தியேட்டர்ஸ்
திகம்பர
சாமியார்
விநாடிக்கு விநாடி துடி துடிப்பைத்
தோற்றுவிக்கும் வடுவூராரின்
கற்பனைக் காவியம்......
டைரக்ஷன்:
டி. ஆர். சுந்தரம்
சென்னை
பிராட்வே
ராஜகுமாரி
(தி. நகர்)




# ரூபாய் 500 இனாம்

## உமா கோல்டு கவரிங் ஒர்க்ஸ்

உமா மஹால் :: மசூலிப்பட்டணம்

உமா கோல்டு கவரிங் ஒர்க்ஸ் போஸ்டாபீஸ்

ஓர் உயர்ந்த உலோகத்தின் மேல் அசல் தங்கத் தகட்டினால் சுற்றப்பெற்று வெல்டிங் செய்தது. அப்படி இல்லை என்று நிரூபிப்பவர்களுக்கு 500 ரூபாய் இனாம். நாங்கள் தயார் செய்யும் தங்க கவரிங் நகைகளின் மேல் U M A என்ற எழுத்துக்களைப் பார்த்து வாங்குங்கள். பொன்னிறம் 10 வருஷ உத்திரவாதம்.

பரீக்ஷை செய்ய வேணும் என்பவர் உமா ஆபரணங்களை நைட்ரிக் ஆஸிட் என்கிற திராவகத்தில் போடவும். போட்டு 5 நிமிஷத்திற்குள் கவரிங் செய்த பொன் வரும். இப்படி பரீக்ஷை செய்தவர் அநேகம் பேர்கள் எங்களுக்கு சர்டிபிகேட் கொடுத்தார்கள். 800 டிசைன்கள் கொண்ட கேட்லாக் இனாம். உள்நாடுகளைவிட இதர தேசங்களுக்கு கேட்லாக் விலையைவிட 25% அதிகம்.

N. B. ஆபரணங்கள் வி. பி. சார்ஜ் 0–15–0 மாத்திரம்.

Tel: "UMA" Masulipatam



# டோங்ரேயின்

## பாலாம்ருதம்

பலஹீனமான குழந்தைகளுக்கு நல்ல பலமளிக்கும், பல் முளைக்கும் போது ஏற்படும் கோளாறுகளை அகற்றி தேக ஆரோக்கியத்தையும், புத்துணர்ச்சியையும் அளிக்கும்.

K. T. Dongre & Co. Bombay—4


# அம்புலிமாமா

## சந்தாதாரர்களுக்கு

அம்புலிமாமா ஒவ்வொரு மாதமும் அதற்கு முந்திய மாதக் கடைசி தேதிகளிலேயே சந்தாதாரர்களுக்கு பிரதிகளை போஸ்ட் மூலம் அனுப்பி வருகிறோம். பிரதிகள் சேரவில்லை என்று தெரிவிப்பவர்கள் அந்த மாதத்தின் முதல் வாரத்திற்குள் எங்களுக்குத் தெரியப்படுத்தவேண்டும். 10 தேதிகளுக்கு மேல் வரும் தகவல்களை கவனிக்கப்பட முடியாது. இதை நீங்கள் என்றும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

மானேஜர்.


நரஸுஸ்
காபிதூள்
உங்கள்
பிரியமான
பானம்
நறுமணம் உள்ளது.
NCZ-7 TM


பண்டிட் டி. கோபாலாச்சார்லுவின்
பொன்விழா
1898 - 1948
ஜீவாம்ருதம்
ஆரோக்யத்துக்கும்
பலத்துக்கும்
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

# அட்டைப்பட விளக்கம்

குவலயபீடம் என்ற மதயானையை மடியவைத்த கண்ணபிரானும், பலராமனும் கோட்டை வாசல் அருகில் நின்று பார்த்தார்கள். உள்ளே சற்று தூரத்தில், நன்ருக அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனத்தில், சபை நிறைந்திருக்க, கம்ஸமகாராஜன் அமர்ந்திருப்பதைக் கண்டனர். முன்புறத்தில் ஓர் பெரிய மல்யுத்தக்களம் ஒன்று ஏற்படுத்தப் பட்டிருந்தது. அதன் மத்தியில் முஷ்டிகன், சாணூரன் முதலிய மல்யுத்த வீரர்களும், அவர்களுடைய போர்ப் பயிற்சியைக் கண்டு மகிழ நினைத்த பல ஜனங்களும், அவ்வரங்கத்தைச் சுற்றி இருந்தனர். முஷ்டிகன் கிருஷ்ண பலராமர்களைப் பார்த்து மிகவும் கேலியாக "ஏ, கிருஷ்ண பலராமர்களே! நீங்கள் காண்பதற்கு சிறியோர். ஆனுலும் போர் செய்வதில் பெரியோர் என்ற எண்ணத்துடன், கம்ஸ வேந்தர் உங்களுடைய போர்ப் பயிற்சியைக் கண்டு, மகிழ்ந்து, தக்க பரிசு அளிப்பாராம். வாருங்கள்! வாருங்கள்!! கை தாருங்கள்! ஒருதரம் என்னைத் தோற்கடியுங்கள்! பார்ப்போம்" என்று சீறினன். பார்ப்பதற்கு, முஷ்டிகனுடைய கைபிடிக்குள் அடங்கிவிடுவார்கள் போல் தோன்றும் இச் சிறுவர்களா அவனுடன் போர் செய்வது? என்ன வேடிக்கை! இதில் ஏதோ சூழ்ச்சி நிச்சயமாக இருக்கிறது" என்று சபையோர் நினைத்தார்கள்.

சாணூரனுடன் கண்ணனும், முஷ்டிகனுடன் பலராமனும் தோள் கொட்டி போர் தொடங்கினர். கிருஷ்ண பலராமர்கள் இருவரும் சேர்ந்து குத்தும் ஒவ்வொரு குத்துக்கும், முஷ்டிகனும் சாணூரனும் மலைகளைப் போலவே பூமியில் சாய்ந்து கொண்டிருந்தார்கள். அத்தகைய வேடிக்கைகளால் சபையோர்களுக்குக் களிப்பூட்டிய பிறகு பாலகிருஷ்ணன் சாணூரனின் கை கால்களை சேர்த்துப் பிடித்து பந்தை எறிவதுபோல் ஆகாயத்தில் எறிந்தான். அவன் பூசனிப் பழத்தைப்போல கீழே விழுந்து "கிருஷ்ணு! கிருஷ்ணு!! என்று கூவிக் கொண்டே உயிர் துறந்தான். முஷ்டிகனும் அதே கதியை அடைந்தான். பிறகு முறையே, கூடன், சிலன், தோபலக்ஷன் என்ற வீரர்களும் கிருஷ்ண பலராமர்களின் கைகளால் மாண்டார்கள்.

# அம்புலிமாமா

பாலர் கதை மாதப்பத்திரிகை

குழந்தைகளே!
வருடம் முந்நூற்று அறுபத்
தைந்து நாட்களும் நமக்கு பண்டிகை தினங்
களே! இந்தப் பண்டிகைகளில், நமது முன்னோர்
கள் எத்தனையோ உயர்ந்த எண்ணங்களை அமைத்
துள்ளனர். அடுத்த பண்டிகை நமக்குத் தீபாவளி அல்லவா?
அன்று நாம் செய்யும் பணிகள் மூலமாய் தைரியத்தை உண்
டாக்கச் செய்வதாக நமது பெரியோர்கள் எண்ணம். தீபாவளி
பண்டிகை அன்று பாணவேடிக்கைகளில் ஈடுபடுகிறோம். அவைக
ளால் நமக்கு இராணுவப் பயிற்சி உண்டாகின்றன. சிறுவயதில்
நாம் விளையாடும் பாணவேடிக்கை முதுமைப் பருவத்தில் பெருகிய
வித்தைகளாக மாறுகின்றன. அதனால் அஞ்சா நெஞ்சமும், துணிவும்
அப்பியாசம் ஆகின்றன. அதற்காக சிறுவர்கள் அபாயகரமான
மருந்து சாமான்களுடன் விளையாடுவதைக் கண்டு நாம் சும்மா
இருக்க வேண்டுமென்பதல்ல. அபாயமில்லாத முறையில் சிறுவர்
களை பாணவேடிக்கைகளில் ஈடுபடும்படிச் செய்வது நலம்.
எவ்விதத்திலும் அவர்களைக் கோழைத்தனமில்லாமல்
வ்ளர்க்கவேண்டும். குழந்தைகளைச் சிறுவயதி
லிருந்தே தைரியத்தை உண்டாக்கி வீரர்களாகச்
செய்வதே நம் முன்னோர்களின்
கொள்கைகளென்று நாம்
கருத வேண்டும்.

மதிமுகம் 7
புன்னகை 4

அக்டோபர்
1950



# நன்றியுள்ள சிங்கம்

அடிமை ஒருவன் அரசனது
கொடுமை இயலாத் துன்புற்றான்
படிறுத்தனமாய், ஓரிரவு
செடிக் காட்டிற்கே ஓடுற்றான்.

அரும்பசியாலே அலைந்திட்டான் ;
மலைமுழை ஒன்றைப்பார்த் திட்டான்,
அருகே போய் யங்கே தங்க
விரும்பி மெதுவாய் நகர்ந்திட்டான்.

அங்கே, கம்பீரமா யொரு
சிங்கம் நொண்டிக்கொண்டெதிரில்
பொங்கும் நோயால் கூவியவன்
தங்கிய புதரிடம் வந்ததுவே

நடுங்கி நின்றான் அதைக்கண்டு,
இடிந்த தைரியமுடன், அடிமை
ஒடிந்த வாழ்வை விடச் சிங்கம்
பிடுங்கித் தின்பதுவே நலமென்றான்

வந்தது சிங்கம் அவனருகே,
தந்தது வலக்கால் அவனிடத்தில்!
அந்தோ! அதிலொரு முள்ளிருக்க,
கொந்தி எடுத்தான், அடிமையவன்

ஆசிரியர்:
அம்புலி

நோய் குறைய சிங்கமது சென்றதுவே
அமைதியாய் அடிமை வசித்திட்டான்;
காய் கனிகளை உண்டங்கே
தேயும் வாழ்க்கையை ஏற்றிட்டான்.

அரசியல் சேவகர், அவன் பின்னே,
துரத்திவந்து பிடித்தனரே
கரங்கள் கட்டி இழுத்தவனை
அரசனின் முன்னே நிற்கவைத்தார்.

குற்றம் பெரியது; ஆகையினல்,
ஆற்றப் பசியுற்றச் சிங்கம்
பீற்றிப் புசிக்கக் கூட்டடைத்தார்,
கூற்றம்போல் பார்க்கச் சங்கம்,!

சீறிக் குதித்த மகாசிங்கம்,
நாறுடன் ஓலித்து அவன்பாதம்
வீறுடன் வாலாட்டி, வணங்கி
ஆருயிர் நண்பன்போல நின்றது

நன்றிகாட்டிய சிங்கமதைக் காண்!
ஆன்ற நெஞ்சு மனிதனுக்குண்டோ?
தோன்றல் அப்படிச்செப்பி அடிமையை
ஊன்றவிட்டான்;நன்றிபோலுண்டோ!



# குயிலே! குயிலே!!

'குமாரதேவன்'

★

பண்ணமுதம வார்க்கும் குயிலே!
பறவைகளில் நீ பண்டிதனே
உண்ணத் தெவிட்டாத் தேனூட்டி,
உள்ளம் குளிரப் பற்றூட்டும்


வண்ணமதை நான் புகழ்வேனே!
வானோரும் மயங்கிடுவாரே!
எண்ணுமொழி யாக்கருத்துள்ள
எதிரில்லாப் பாக்கனிகொடுப்பாய்!

பால் வெண்மதியின் பானிலவு
பரவும் இரவில பாடுவனே,
மேல்வெயில் வீசும் காலமதில்
மெல்லிய இசை நீ பெய்திடுவாய்,

மால்கொளும் காதலர் மயங்கிடவே,
மாபெரும் இசையைப் பாடிடுவாய்
தோல்கொளும் கனிகளை உண்ணும் நீ
தோகையர் மனமதைத் தேற்றிடுவாய்.

சாலையின் கண்ணே செல்வோர்க்கு
சாலவும் சால்பைத் தருகின்றாய்
சோலை நிழலில் இருப்போர்க்கு
சோர்வைத் தீர்க்கு மமுதானாய்

வேலைகள் செய்து மெலிந்தோர்க்கு
வேண்டும் புத்துயிர் தருபவனாய்
மாலைப் பொழுதில் மகிழ்வோர்க்கு
மனர்புக்காத லிசையானாய்.





**கோ**வூரில் கோதண்டபாணி என்ற பணக்காரர் இருந்தார். அவருக்கு மாம்பழங்கள் மீது மிகவும் ஆசை. தன் வீட்டிற்கருகே ஓர் மனையை வாங்கிக் கொண்டு, அவ்விடத்தில் நாட்டில் உள்ள பற்பல ஜாதி மாஞ்செடிகளை வரவழைத்து தன் கைபட நட்டு, நீர் ஊற்றி வளர்த்து வந்தார். அந்த மரங்கள், எப்போது காய்க்கும்? என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் எண்ணம்போலவே அத்தனை மரங்களில், ஓர் களேபாட் என்ற சுவை மிகுந்த ஜாதி மரத்தில் இரண்டு காய்கள் காய்த்தன. அவைகளைப் பறவைகள் கடிக்காமல் வெகு ஜாக்கிறதையாகக் காவல் காத்து செங்காய்களாகப் பக்குவம் ஆனதும் கொய்து பழுக்கப் போட்டார். முதன் முதல் காய்த்த பழங்கள் அல்லவா! சாதாரணப் பழங்களைவிட சற்றுப் பெரிதாகவே இருந்தன.

கோதண்டபாணி வீட்டில் குப்பன் என்ற சமயற்காரனைத் தவிர மனைவி மக்கள் இல்லை. அந்தக் கனிகள் பழுத்த உடனே அவர் 'மருந்தேனும் விருந்துடன் உண்ணவேண்டும்' என்றபடி தன் பழைய நண்பன் குழந்தைவேல் என்பவரை அழைத்து வரப் புறப்பட்டார். வழியில் ஓர் பரதேசியைக் கண்டு அவரைத் தான் எங்கேயோ முன்பு பார்த்திருந்ததை நினைத்து "ஏங்க! தாங்கள் எந்த ஊர்?" என்று கேட்டார்.

பரதேசியோ அரைகுறைத் தமிழில் தனது ஊர் காசி என்று கூறினார். அத்துடன் அவர்


கே. வி. சுப்ரமணியஸ்வாமி, தஞ்சாவூர்



கோதண்டபாணியை அடையாளம் கண்டுகொண்டு "அச்சா கோதண்டபாணீ ஜீ!" என்று அவர் பெயரிட்டு கூப்பிட்டதும் கோதண்டபாணிக்கு அவர் யார் என்பது ஞாபகம் வந்தது. தான் காசியாத்திரை செய்தபோது சந்தித்த கோவர்தன் பண்டா என்பவர். "தென் நாட்டு யாத்திரை செய்யவந்தேன்" என்று அவர் சொன்னதும் கோதண்டபாணி சந்தோஷத்துடன் நேசம் பாராட்டி, உரிமை கொண்டாடி தன் இல்லத்திற்கு அவரை அழைத்துச் சென்றார். தான் எடுத்து வைத்திருந்த மாங்கனிகளை அந்தப் புண்ணியவானுக்கு விருந்திட வேணும் என்ற எண்ணம் உதித்தது.

கோவர்தன் பண்டாவை தன் வீட்டுக் கூடத்தில் அமரச் செய்து உள்ளே போய் குப்பனைக் கண்டு அந்த மாம்பழங்களைக் கொடுத்து "இவைகளைக் கழுவி, தோல்சீவி, அறுத்து, கொட்டை நீக்கி, இரண்டு வெள்ளித் தட்டுகளில் சமமாகப் போட்டு அங்கே எங்களுக்குக் கொண்டு வா" என்று சொல்லிக் கொடுத்து, மறுபடியும் கோவர்தன் பண்டாவிடம் பேசிக் கொண்டு உட்கார்ந்தார்.

குப்பன் பழங்களைத் தன் இடுப்பில் வைத்திருந்த பேனாக்கத்தியால் சீவி சிறிய சிறிய துண்டுகளாக அறுத்ததே, பழத்தை முகர்ந்ததன் பயன் போலும், வாயில் நீர் சொட்ட ஓர் கனித் துண்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். அதன் சுவையைக் கண்டு தான் செய்யும் காரியம் தகாதென்பதையும் மறந்து குப்பன், ஒவ்வொன்றாக பழத் துண்டுகளை முற்றிலும் முழுங்கி விட்டான்! கூடத்தில் உள்ளவர்களை மறந்தே போய்விட்டான்!



சமையல்காரன் வெகு நேரமாகியும் வராததால் கோதண்டபாணி உள்ளே போய் குப்பனைக் கேட்டார். அவன் உடனே விழித்துப் பார்த்து "என்ன பண்ணுவதுங்க, இந்தக் கத்தி துளியாவது அறுக்கல்லேங்க! அதாலே அந்த பழங்களை அறுத்தால் அது வீணாக நசுங்கி போய் விடுங்க!" என்றான். "என்னடா! கத்தி கூரில்லையென்று சும்மாப் பார்த்துக் கொண்டிருந்தாயா? மடையா!" என்று கோபத்துடன் விருவிருவென்று கட்டை வெட்டும் கத்தியை எடுத்துக் கொண்டு அருகிலிருந்த ஓர் பாறையில் போட்டு பறபற வென்று தீட்ட ஆரம்பித்தார்.


குப்பனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தப்பித்துக் கொள்ள எண்ணி கோவர்தன் பண்டாவிடம் சென்று "இப்படிவா" என்று சைகை செய்து "ஜன்னல் வழியே கோதண்டபாணியைக் காட்டி "தேக்கியே, தேக்கியே ஜீ மஹாராஜ்!" என்றான். அவர் விளங்காமல் "க்யா? க்யாஹை? க்யா ஹுவா?" என்று கேட்க, குப்பன் "உங்களை இங்கு இவர் அழைத்துக் கொண்டுவந்த காரணம் தெரியவில்லையா? தினந்தோறும் இவர் ஒவ்வொரு பரதேசியாக அழைத்து வந்து, அவர்களுடைய இரண்டு காதுகளையும் அறுத்து அம்மன் பூசை செய்வார். இன்று உங்கள் காதுகளுக்கு வந்தது கேடு. அந்தக் கத்தியைத் தீட்டினதும், எஜமான் உம் காதுகளை அறுத்து பூசை செய்வார்" என்றான். கோவர்தன் பண்டா பயம் கொண்டு "தென்னாட்டுப் பழக்கங்களில் இதுவும் ஒன்று போலும்!" என்று நினைத்துக் கொண்டு பிடித்தார் ஒரே ஓட்டம்.

குப்பன் உள்ளே சென்று கோதண்டபாணிக்குக் கேட்கு மாறு "திருடன்! திருடன்!! எஜமானே, தங்கள் மாங்கனிகளைத் திருடிக் கொண்டு ஓடுகிறான். என்று குரலிட்டுக் கூவினான். கோதண்டபாணி தீட்டிக் கொண்டிருந்த கத்தியுடன் கூடத்திற்கு வந்து "எங்கே திருடன்?" என்று கேட்டார். குப்பன் ஓடிக் கொண்டிருக்கும் கோவர்தன் பண்டாவைக் காட்டி 'அவருங்க! தங்கள் மாங்கனியை களவாடிக்கொண்டு ஓடுகிறார்" என்றான்.

கோதண்டபாணி அவரை கூப்பிட்டுக் கொண்டே தெருவில் ஓடி "ஏ நண்பா, சாப்பிடுவதற்காகத் தானே, உன்னை அழைத்து வந்தேன். சொல்லாமலே ஓடுவது அழகன்று. நண்பனுக்குச் செய்யும் உபகாரம் இதுதான் போலும். போனது போகட்டும். உனக்கு ஒன்று; எனக்கொன்று. ஒன்றை மட்டும் எனக்கு அறுத்துக் கொடுத்துவிடு!" என்று சொல்லிக் கொண்டே அவர் பின் ஓடினார். பாவம் கோதண்டபாணி மிகவும் பருத்த மேனியராகையால் கோவர்தன் பண்டாவைப் பிடிக்க முடியாமல் போயிற்று.

கோவர்தன் பண்டாவுக்கு இன்னும் பயம் அதிகரிக்க "அரே பத்மாஷ்! ஒன்றையும் உனக்குக் கொடுக்க முடியாது. வாடா இன்னொருதரம் காசிக்கு, உன் கண்கள் இரண்டையும் பிடுங்கி கங்கையில் எறிந்து விடுகிறேன்! நீயும் ஒரு நண்பனா? நல்லவேளை உன் வேலையாள் சொன்னானே, நான், பிழைத்தேனே. உன் வீட்டிற்குத் திரும்பிவர எனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே ஓட்டம் பிடித்தார்.

கோதண்டபாணியின் ஆசை நாசமாயிற்று. 'கைக்கெட்டிய பழம் வாய்க்கு எட்டவில்லையே' என்று மனமுடைந்து திரும்பினார். இதற்குள், குப்பன், மாம்பழத் தோல்களையும் கொட்டைகளையும் மறைத்து விட்டான்.






4


[சுரங்கத்தின் வழியே அரசன் சுஹாசினியை அழைத்துக் கொண்டு தரை மாளிகைக்குப் புறப்படுவதும், வழியில் அவர்களுக்குத் தாதி தென்படுவதும், அசற்குப்பன் வழி தவறிப்போனதினால் அரசன் அவ்விருவரையும் சுரங்கத்தில் விட்டுத் திரும்பி வருவதற்குள் அவர்கள் காணாமல் போய்விடுவதும், மன்னன் வழிதெரியாமல் சுரங்கத்திலேயே திரிந்துகொண்டு இருந்ததையும் முன் மலரில் நீங்கள் படித்தீர்கள்.]


அரசன் அவ்வாறு அலைந்து கொண்டிருக்கும்பொழுது ஓரிடத்தில் ஓர் துவாரம் தெரிந்தது. அங்கே சுஹாசினியும், தாதியும் காணப்பட்டார்கள். ராஜன் மிகவும் மகிழ்ந்தான். அந்தத் துவாரத்தின் வழியே புகுந்து தன் மகளுடைய படுக்கை அறையைச் சேர்ந்தான்.

இந்த விந்தையான சுரங்கத்தின் இரகசியம் என்னவென்று பார்க்கையில் சுஹாசினியின் அறைக்குள் இருந்த சுவறுகள் எல்லாவற்றிக்கும் துளியேனும் இடமில்லாமல் கூரையிலிருந்து தரை வரைக்கும் நிலைக் கண்ணாடிகள் அமைக்கப்பட்டு இருந்தன. அந்தக் கண்ணாடிகளில் ஒன்று மிகவும் அற்புதமானது. அந்த உட்புறத் தரை மட்டத்தில் ஓர் சிறிய விசை இருக்கிறது. அதை அழுத்தினால் அந்தக் கண்ணாடி தரைக்குள் இறங்கி, அது இருந்த இடத்தில் ஓர் பெரிய துவாரம் உண்டாகும். அந்தத் துவாரமே சுரங்கத்திற்குள் போகும்

வழியாகும். படுக்கை அறைக்குள் இருக்கும் விசைபோல அச் சுரங்கத்தின் மறுபுறத்திலும் ஒன்று உண்டு. அதை அழுத்தினதும் அந்த நிலைக்கண்ணாடி மேலுக்கு உயர்ந்து முன்போல துவாரத்தின் முகத்தை மூடிவிடும்.

ஆனால் சுஹாசினி அரசன் இருந்த பள்ளியறைக்குள் எங்ஙனம் வந்தாள்? வழக்கம் போல் தாதி சுஹாசினியின் அருகில் படுத்து உறங்குவது உண்டு. ஒரு இரவு சுஹாசினி விழித்தெழுந்து, உலாவிக்கொண்டு இருந்தபோது அவளை அறியாமலேயே தரையிலிருந்த விசையை மிதித்துவிட்டாள். உடனே அந்த நிலைக்கண்ணாடி தரைக்குள் சென்று அவ்விடத்தில் துவாரம் தெரிந்தது. ஆச்சரியத்துடன், சுஹாசினி, அந்த சுரங்கத்தில் புகுந்து அரசனின் பள்ளியறையில் இருக்கும் படத்தின் பின்புறம் வந்தாள். அங்கே காரிருளாக இருந்ததினால் அங்கு வழி இருப்பது சுஹாசினிக்கு எப்படித் தெரியும்? இன்னும் போகலாமென்று முன்னே போகப் போக அந்தப்படம் வழி கொடுத்தது. அந்த துவாரம் வழியாக தூங்குகின்ற அரசன் தென்






பட்டான். உடனே சுஹாசினி அப்பாவிடம் போக வேண்டு மென்ற ஆவலினல் எவ்வளவோ கஷ்டப்பட்டு அத்தகைய பெரிய படத்தை ஓரமாகத் தள்ளினள். அதற்குப்பின், அரசன் இந்த விந்தையான சுரங்கத்திற்குள்ளே எப்படி அகப்பட்டு திரிந்தான் என்ற விஷயம் நீங்கள் படித்ததே.

இவ்வாறு இந்தச் சுரங்கத்தின் ரகசிய வழியைப்பற்றி அறிந்ததும் அரசனுக்கு ஓரளவு சந்தோஷமும் பயமும் உண்டாயிற்று. ஒருவர் கண்ணிலும் படாமல் எப்படியோ தோட்டத்திலிருந்து தரை மாளி கைக்கு வந்து போய்கொண்டிருந்த அரசனுக்கு, இந்த சுரங்கத்தின் ரகசியம் தெரிந்ததினல் அப் பயமும் நீங்கிற்று. நினைத்த போதெல்லாம், தன் பள்ளியறைக் குள் இருந்தே, தேவர்களுக்கும் தெரியாமல், தரை மாளிகைக்குச் சென்று தன்னருமை புதல்வி களைப் பார்த்துக் கொள்ளலாம். இவ்விதம் தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்திற்கு மன்னன் மிக வும் களிப்புற்றான்.

ஆனல் அரசனுக்கு இன்னெரு பயம் பிடித்துக் கொண்டது. சரி யான காவல் இல்லாவிட்டால் இன்று போல் மற்ரெருநாளும் சுஹாசினியோ அல்லது மற்று முள்ள குழந்தைகளோ, இந்த சுரங்கத்தின் வழியே, தன் பள்ளி யறையை அடைந்து அங்கிருந்து வெளியில் போய்விட நேரிடலாம். அதனல், தான் பட்ட கஷ்டமெல் லாம் பயன்படாமல் குழந்தைகள் மூவரும் மறைந்துபோகும்படி நேரிடலாம். அத்தகைய துன்பம் நேரிடாமல் இருப்பதற்குள்ள வழி யொன்றை மிகவும் ஆலோசித் தான். அவருக்கு ஒரு வழி தோன் றியது.

அந்த அறையைக் காலியாக வைக்க அரசன் நிச்சயித்தான். உடனே இரண்டு அறைகளுக் குள்ளே புதல்விகள் மூவரையும் வைத்து தாதிகளை வெகு ஜாக்



கிரதையாக கவனிக்க வேண்டியதென்று எச்சரிக்கை செய்து வைத்தான். குழந்தைகளைக் கொஞ்சிய பிறகு முன் சுஹாசினி இருந்த கண்ணாடி அறைக்கு வந்தான். விசையின்மேல் அடி வைத்ததும் நிலைக் கண்ணாடி பூமிக்குள் இறங்கி துவாரம் காணப்பட்டது. அதன் வழியே சுரங்கத்திற்குள் சென்று அங்கிருந்த விசையை அழுத்தியதும் துவாரம் மறுபடியும் மூடிக்கொண்டது. இந்த இரகசியப் பாதையைத் தனக்களித்த இறைவனை வாழ்த்திக்கொண்டு அரசன் ஆனந்தமாகத் தன் பாளிகையை அடைந்தான்.

அன்று முதல் வேந்தன் தரை மாளிகைக்குள் தாராளமாகவும், தைரியத்துடனும் போய் வந்து கொண்டிருந்தான். தந்தை, தம்மிடம்வந்தபோதெல்லாம் அரசகுமாரிகள் மூவரும் "அப்பா, நாங்களும் உன்னுடன் வருவோம்" என்று பரிதாபமாகக் கேட்டுக் கொள்வார்கள்.

அரசன் "மற்றொரு சமயம் அழைத்துச்செல்கிறேன்" என்று சமாதானங்கள் சொல்லிக்கொண்டிருந்தான்.

சில மாதங்கள் கடந்தன. தன் புத்திரிகள் மூவரும் கவலையற்று வளருவதைக கண்டு அரசன் ஆனந்தமடைந்தான். ஆனால் ராணி மட்டும், நாட்கள் கடந்ததோடு, தன் வாழ்க்கையின் சிறப்பும் குறைந்துகொண்டே போவதினால், மனக்கவலை நீங்காமல் வருத்தத்துடன் வாழ்க்கை நடத்திக் கொண்டு வந்தாள். தான் பெற்றெடுத்த புதல்விகளைக் காணாமல், தேடிவரச் சென்றிருந்தவர்கள் ஒருவரும் நல்ல சேதி கொண்டு வரவில்லை. இடையில் பலதரம் சோதிடரை அழைத்து "சுவாமி, என் குழந்தைகள் க்ஷேமமாக இருக்கிறார்களா பாருங்கள்!" என்று கேட்பதும், அவர் "குழந்தைகள் மட்டும் அல்ல, அவர்களைத்


தேடிவரச் சென்ற அந்த நூறு போர் வீரர்களும், மற்றுமுள்ள தாதிகள் ஒவ்வொருவரும் ஒருவித கெடுதியும் இல்லாமல் இருந்து, திரும்பிவரும் அம்சங்கள் நன்ருக விளங்குகின்றன. தாங்கள் விசன மடைய வேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டுவந்தார். அதைக்கேட்டு ராணி திருப்தி அடைந்து இருந்தாள்.



இவ்வாறு இரண்டு ஆண்டுகள் கடந்தன. வேந்தன் தரை மாளிகைக்குள் ரகசியமாக தினந்தோறும் போவதும், புத்திரிகளின் க்ஷேமத்தைக் கண்டு களிப்பதும் நடந்து வந்தது. ஆனல் அரசன் அங்கு சென்ற போதெல்லாம் புதல்விகள் மூவரும் அவனுடன் கூடவர வேண்டுமென்று அமர்க்களப் படுத்துவார்கள். "அப்பா, எங்களை இங்கே எதற்கு வைத்துள்ளாய்? என்று அழுது கால்களைக் கட்டிக் கொள்வார்கள். அவர்களுடைய கண்ணீரைக் கண்டு, அரசர் மனம் வருந்துவது பலதரம் உண்டு. ஓர் சமயம் தன் மனைவிக்குக் குழந்தைகளைக் காட்டி வரலாம் என்று நினைப்பதும் உண்டு. உடனே அவன் அந்த எண்ணத்தை மறக்கடித்துக்கொண்டு, இன்னுமொரு ஆண்டு மட்டும் இந்தக் கஷ்டம் என்று மனதை அடக்கி குழந்தைகளை ஏதோ விதமாக சமாதானப் படுத்திவிட்டு வந்துவிடுவான்.

அப்படி சிலநாட்களுக்குள் குழந்தைகளுக்கு ஏழு ஆண்டுகள் நிறைந்து, கண்டங்களும் கடந்து தரை மாளிகையிலிருந்து, விடுதலை அடைவார்கள். சென்ற மூவாண்டுகளும் ஒருவித ஆபத்தும் வராமல், இந்தத் தரை மாளிகையில் எவ்வித இடையூறில்லாமலும் காப்பாற்றி இன்னும் இந்த நான்கு நாட்களும ஜாக்கிரதையாக இருந்து விட்டால் குழந்தைகள் கண்டத்திலிருந்து தப்பி விடுவார்கள் என அரசன் எண்ணினன்.

வழக்கம்போல், வேந்தன் ஒரு நாள் அதிகாலையில் குழந்தை




களைப் பார்த்து வரச்சென்றான். அவர்கள் அந்தத் தரை மாளிகையில் இருக்கவேண்டிய கால அளவு அன்றுடன் தீர்ந்துவிடும் என்று கணக்கிட்டிருந்தான். குழந்தைகள் வழக்கம்போல் தங்களை வெளியில் அழைத்துக் கொண்டு போக வேண்டுமென்று பிடிவாதமாக வற்புறுத்தினார்கள். அரசன் மனமிரங்கி "இத்தனை ஆண்டுகளாக எத்தகைய ஆபத்தும் நேரிடவில்லை அல்லவா? இந்த இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் என்ன முழுகிப் போய்விடும்? இத்தனை பேர் இங்கு காவல் இருக்கின்றபோது, யாதொரு ஆபத்தும் வராது" என்று மனோதைரியம் கொண்டு, தன் மூன்று புதல்விகளையும், தாதிகளையும், மற்றுமுள்ள நூறு போர் வீரர்களையும் அழைத்துக் கொண்டு தரை மாளிகையை விட்டுப் பூந்தோட்டத்திற்கு வந்தான். தாதியர் மூவரும் குழந்தைகளை மடியில் வைத்துக் கொண்டு உட்கார்ந்தனர். அரசனும் அவ்விடமே அவர்களருகிலேயே உட்கார்ந்தான். நூறு போர் வீரர்களும் அவர்களைச் சுற்றி நின்றிருந்தார்கள். இத்தனை ஆண்டுகள் கழித்து இவ்வுலகைப் பார்க்க நேர்ந்ததற்குக் குழந்தைகள் எழுந்து ஆனந்தமாகக் குதித்து கூத்தாடினார்கள். அவர்களுடைய சந்தோஷத்தைக் கண்ட மன்னன் மனமாற மகிழ்ந்தான்.

இதற்குள் திடீரென்று ஓர் சுழல் காற்று, பிரும்மாண்டமாக வந்து அடித்தது. அந்த இடம் முழுவதும் ஒரே தூசியினால் நிறம்பி அங்கிருந்தவர்கள் எல்லோரையும் அரைக் கணம் கண்களை மூடச்செய்தது. எல்லோரும் கண் திறந்து பார்ப்பதற்குள் எங்கிருந்தோ பருந்துகள் வாயுவேகமாக வந்து அந்தக் குழந்தைகள் மூவரையும் கௌவிக் கொண்டு பறந்து போவதைக் கண்டார்கள்! அரசன் அதைக் கண்டு மதியிழந்து விழுந்தான். தாதிகள் அரசனுக்கு உப


CHITRA

சாரங்கள் செய்தார்கள். வீரர்கள் யாவரும் அப் பருந்துகள் பறந்த திக்கை நோக்கி ஓடினார்கள்.

அரசன் விழித்ததும் வீரர்களெல்லோரும் தலைகளைத் தொங்க விட்டுக்கொண்டு திரும்பி வந்தார்கள். மூன்று ஆண்டுகளுக்குமுன் அரசன கரபனைசெய்து கதையாகச் சொன்னது இன்று உண்மையாக நடந்துவிட்டதைக் குறித்து மன்னன் தன்னைத் தானே நொந்துகொண்டான்.

'இன்று இவ்வாறு நடக்கப் போவதற்காகவே', அன்று ஏதோ துஷ்டகிரகம் என்னுள் புகுந்து என்னை அப்படிப்பட்ட அமங்களச் செய்தியைச் சொல்லச் செய்ததுபோலும்!" என்று நினைத்து அரசன் கண்ணீர் விட்டு அழுதான். விதியினால் நடக்கவேண்டியது நடந்து விட்டது. நிஜமாகவே ஏதோ அதிசயசக்தி தூண்டுகோல் கொடுத்ததினால்தான், அரசன் தன் மனதில் இருந்த கட்டுப்பாடுகளை விட்டு விட்டு, குழந்தைகளைப் பூந்தோட்டத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டுமென்ற எண்ணங்கொண்டான். நடக்கவேண்டியது நடந்துவிட்டது! கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதினால் பயனென்ன? இனிமேல் ராணிக்கு இந்த விஷயங்களையெல்லாம் ஏன் ஒளிக்கவேண்டும்? இவ்வாறு அரசன், பல யோசனைகளுடன் உடனே தன் பரிவாரங்களுடன் அரண்மனையை அடைந்து, வருத்தத்துடன் நடந்த செய்திகள் யாவற்றையும் மனைவிக்குச் சொல்லி விட்டான்! அரசனும் ராணியும் சேர்ந்து துக்கக் கடலில் மூழ்கிவிட்டனர்!

---

[இத்தகைய கடூரமான வார்த்தையைக் கேட்ட பின்பு ராணி, தைரியமடைந்து, முன்போலவே பிழைத்திருந்தாளா? பருந்துகள் கௌவிக் கொண்டு போன அந்த அதிசயப் பிறவிகள் மூவரும் என்ன கதியடைந்தனர்? இவ் விஷயங்களை அடுத்த இதழில் நீங்கள் படிப்பீர்கள்]






# உரோம செல்வம்

முன்னொரு காலத்தில் வேலப்பன் என்பவன் ஜாம்பவந்தரை நோக்கி கடுந்தவம் செய்தான்.

ஆனால் ஜாம்பவந்தர் வேலப்பனுக்குப் பலகாலம் வரையில் தரிசனம் அளிக்கவில்லை. ஏனென்றால் வேலப்பன் ஒரு மனிதன் — பூலோகத்தில் தன்னை நினைத்து கடுந்தவம் செய்து கொண்டு இருக்கிறான் என்று அவர் அறியார். ஆகையால் வேலப்பன் தவத்தை அறிவதற்குக் கொஞ்சம் காலதாமதம் ஆயிற்று. அறிந்தவுடன் பிரத்தியக்ஷமாக நின்று "வரம் கொடுத்தேன் கொள்ளும் பிள்ளாய்" என்றார்.

வேலப்பன் கண்களைத் திறந்து கண்குளிரக் காட்சி அளிக்கும் ஜாம்பவந்தருக்கு உடனே சாஷ்டாங்கமாக வணங்கி. "கரடிகுல மகானே,! தாங்கள் பிரம்மா முகத்திலிருந்து தோன்றிய பெரியார்; சிரஞ்சீவியானவர்; கடவுள், ராமாவதாரம் எடுத்த காலத்தில் அவருக்குப் பெரும் உதவியளித்து பெரிய திருவடிகள் என்று புகழ் பெற்றீர்; பகவான் கிருஷ்ணனாக அவதரித்தபோது அப்பரமாத்மாவின் மாமனாரகும் பெருமை பெற்றீர்; இக்காலத்தில் என் போன்ற பேதைக்கு அரும் பெரும் தெய்வமாக நினைக்கச் செய்த தங்களுடைய — உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையிலும் அடர்ந்து வளர்ச்சி கொண்ட — உரோமங்களே ஆகும்! அவ்வித உரோமச் செல்வத்திற்கு மகிழ்ந்தே அடியேன் தங்களை நோக்கி இத்தவம் செய்துள்ளேன். சுவாமி, தாங்கள், அளிக்கும் வரம் என் பாமா, அருணாசலத்திற்கு அளிப்பீராக. அவருக்கு ஒவ்வொரு செவியிலும் ஒவ்வொரு கோடி

என். பத்மாஸனி, தியாகராயநகர்



மயிர் உடனே வளரும்படி அனுகிரகம் செய்யுங்கள், போதும்" என்று வேண்டினான்.

ஜாம்பவந்தர், இந்த விசித்திரமான விருப்பத்தைக் கேட்டு அவன் உள்ளத்தை அறியமுடியாமல் "பக்தனே, இத்தகைய வரத்தை வேண்டுவதினால் உன் உள்ளக் கருத்து யாது?" என்று கேட்டார். வேலப்பன் "சுவாமி, அது மிகவும் இரகசியமான விஷயம். மன்னிக்கவும்." என்றான். "உன் வேண்டுகோள்படியே வரம் கொடுத்தேன்" என்று சொல்லி மறைந்தார், ஜாம்பவந்தர்.


வேலப்பன் வெகு சந்தோஷத்துடன் தன் ஊருக்கு வந்தான். அவன் பெற்றோர் அவனைக் கண்டு களிப்புடன் "அப்பா, இத்தனை நாள் எவ்விடம் போயிருந்தாய்?" என்று கேட்டார்கள்.

வேலப்பன் ஆத்திரத்துடன் "அருணாசல மாமா எங்கே? பிறகு உங்களுக்குச் சொல்கிறேன் எல்லா சங்கதிகளும்" என்றான்.

"உறங்கிக்கொண்டிருக்கிறான்" என்று அவன் தாயார் சொன்னாள்.

வேலப்பன் ஓட்டமாக ஓடி உறங்கிக் கொண்டிக்கும் அருணாசலத்தை உற்றுப் பார்த்து, அவன் இரண்டு செவிகளிலும் நிறைந்து வளர்ந்து காணப்படும் உரோமக் கொத்துக்களைக் கண்டு, பகவான் ஜாம்பவான் அளித்த அரும் வரத்தின் பயனைக் கண்டு மகிழ்ந்தான். மெதுவாக அந்த மயிர் கொத்துகளைத் தன் கையாரத் தடவிக் கொடுத்துக் களிப்புற்று, கூத்தாடினான். அதற்குள் அருணாசலம் விழித்து வேலப்பனைக் கண்டு ஆனந்தமடைந்து "எங்கிருந்து வந்தாய் வேலப்பா? ஏன் இந்தக் கூத்து?" என்று கேட்டான்.

"மாமா, உம் காதுகளில் வளர்ந்துள்ள உரோமங்களைப் பாரும்!" என்றான் வேலப்பன்.



"உரோமங்களா? இது என்ன ஆச்சரியம்!" என்று திடுக்கிட்டு அருணாசலம் நிற்பதை, வேலப்பன் தாய் தந்தையர்களும் வந்து பார்த்தார்கள்.

வேலப்பன் அருணாசலத்தைக் கண்டு "மாமா, கோலப்பன் மாமனாரான கண்ணப்பனின் காதுகளில் இருக்கும் மயிர்களை விட உம் காது உரோமங்கள் எவ்வளவு நேர்த்தியாக இருக்கின்றது! இரட்டித்த அடர்த்தி! இரட்டித்த நீளம்! இனிமேல்— இரண்டு இரண்டு நான்கு—நான்கு இரண்டு எட்டு — கண்ணப்பனின் செல்வத்திற்கு மிஞ்சி எட்டு மடங்குச் செல்வம்! அதுவே எட்டு வித செல்வங்கள்!" என்று சொல்லிக் கொண்டு வேலப்பன் மறுபடியும் கூத்தாடத் தொடங்கினான். "அஷ்டஐச்வரியங்கள் யாருக்கு?" என்று அருணாசலம் வேலப்பனைக் கேட்டான்.

"எவருக்கா? எனக்கு! கண்ணப்பன் செவியிலுள்ள மயிர்களால் கோலப்பன் செல்வம் அடைந்தான்" என்றான் வேலப்பன். 'அவனவனின் மாமனார்களின் செவிகளில் முளைத்த மயிர்களுக்கும், அவன் அவன் மைத்துனன் அடையும் ஐச்வரியத்திற்கும் உள்ள சம்பந்தம் யாது? என்பது அருணாசலத்திற்குப் புரியாமல், உடனே கோலப்பனைக் கண்டு, கேட்டுத் தெரிந்து கொள்வதற்குப் போனான். கோலப்பனைக் கண்டு "கோலப்பா, சில நாட்களுக்கு முன் என் மைத்துனன் எங்கேயோ சென்றிருந்து வந்தான். அவன் வந்தது முதல் உன் மாமா கண்ணப்பன் காது மயிர் மூலமாக நீ ஏதோ செல்வமடைவதுபோல், அருணாசலத்தின் செவி மயிர்களால் வேலப்பன் ஐச்வரியம் பெறப்போகிறான்" என்று உளரிக்கொண்டு கூத்தாடுகிறான், நீ அவனிடம் என்ன சொன்னாய்?" என்றான்.

கோலப்பன் "ஆனால் அருணாசலம், உன் காதுக்குள்ளே கூட உரோமங்கள் உண்டா?" என்று கேட்டான்.

"இதுவரையிலும் இருந்ததில்லை. இன்று நான் உறங்கி விழித்தவுடன் ஆச்சரியமாக இரண்டு காதுகளிலிருந்தும் இவ்விதமான மயிர்கள் வளர்ந்துள்ளன பார்" என்று மூடிவைத்துள்ள தன் காதுகள் இரண்டையும் காட்டினான். அதைக் கண்டு அதிசயமடைந்த கோலப்பன் "அருணாசலம், நடந்த சங்கதியைக் கேள். ஒருநாள் வேலப்பன் என்னிடம்வந்து 'உனக்கு இவ்வளவு செல்வம் வரக் காரணமென்ன?' என்று கேட்டான். கஷ்டப்பட்டு சம்பாதித்தேன், என்ற பதிலுக்குத் திருப்தியடையாமல் மிகவும் தொந்திரவு செய்ய அந்த வழியே தற்செயலாக வந்த என் மாமா கண்ணப்பரைக் காட்டி, 'இதோபார்! அவருடைய காதுகளில் இருக்கும் மயிர்களே மைத்துனனான எனக்கு இத்தகைய செல்வத்திற்குக் காரணம்" என்று சொல்லி யனுப்பி விட்டேன். வேலப்பன் அன்றே மறைந்துபோய்விட்டான்" என்று சொன்னான். அருணாசலம் தன் இல்லத்திற்கு வந்து வேலப்பனைக் கெஞ்சிக் கெஞ்சி கேட்டதும் வேலப்பன் தான் ஜாம்பவந்தரை நோக்கி தவம் செய்து பெற்ற வரத்தின் வரலாற்றைச் சொல்லி தனக்கு வரப்போகும் அஷ்டவிதமான ஐசுவரியத்தைப் பற்றி விளக்கிக் கூறினான்.

பலகாலம் தனக்கு அளவு கடந்த செல்வம் வரப்போகிறதென்று எதிர்பார்த்துக் கொண்டே இருந்தான். பாவம் தான் பட்ட பாட்டிற்குப் பயனாக தன் மாமன் அருணாசலத்துச் செவிகளில் முளைத்த உரோமச் செல்வம் மட்டுமே மிச்சமடைந்து இருந்தது. வேறு ஒரு வித பாக்கியமும் அவன் பெறவேயில்லை.






வீரமங்கலம் என்ற கிராமத்தில் வீரப்பன் என்னும் பெரிய கர்வம் பிடித்த பலசாலி ஒருவன் இருந்தான். அதனால் அந்தக் கிராமத்தார் அவனைக் கண்டு பயப்படுவார்கள். அவன் ஓர் நாயை வளர்த்து வந்தான். அதைப் பகலில் பார்த்தாலே போதும்! இரவில் கனவில் வந்து பயமுறுத்தும்! வீரப்பன் அதை ஒருநாளும் கட்டி வைத்ததில்லை. "தயவுசெய்து அதைச் சங்கிலி போட்டுக் கட்டி விடுங்கள்" என்று அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சொல்லிப் பார்த்தார்கள். வீரப்பன் "இவர்கள் சொல்வது—நான் கேட்பதா!" என்ற அகங்காரம் கொண்டு அவர்கள் சொல்வதைக் கேட்கவில்லை.

ஒரு நாள் அந்தக் கிராமத்தின் ஏரியை சுத்தப் படுத்துவதற்காக ஒட்டரின் கூட்டம் ஒன்று வீதி வழியே சென்றுகொண்டிருந்தது. அவர்களைக் கண்ட வீரப்பன் வீட்டு நாய், குலைத்துக்கொண்டு பின் பற்றித் துரத்தியது. அந்தக் கூட்டத்திலிருந்த வேலன் என்பவன் அந்த நாயை விரட்டப் பார்க்க அந்த நாய், ஒரு குதி குதித்து அவன் மேலே விழுந்தது. அவன் தோள் தசையைக் கடித்து இழுக்க முயன்றது. அவன் மட்டும் அரை நொடி ஏமாந்து இருந்தால்—ஓநாய் போன்ற அந்த நாய், அவனைக் கொன்று, மென்று, தின்றுவிட்டிருக்கும்! அவன் அதை ஒரு உதை கொடுத்து தன் கையிலிருந்த கடப்பாறையினால் ஒரு குத்துக் குத்தினான். அந்த நாய்க்கு பெரிய காயம் பட்டது. முகத்திலிருந்து இரத்தம் ஒழுகிற்று. அது திரும்பி ஊளையிட்டுக் கொண்டே வாலை

கெ. துளசிபாய், யாழ்பாணம்





மடித்துக் கொண்டு வீரப்பனிடம் போய்ச் சேர்ந்தது.

தன் அருமை நாய் அடிபட்டதைக் கண்ட வீரப்பன் வீராவேசங் கொண்டு கதை போன்ற ஒரு பெரிய தடியை எடுத்துக் கொண்டு தெருவில் போகும் ஒட்டரைக் கண்டு "யாரடா, என் நாயைக் குத்தினவன்?" என்று கர்ஜித்தான். நாயை அடித்த வேலன் "நான்தான்" என்று நாலடி முன்னால் வந்தான். வீரப்பன் தன் கையில் இருந்த தடியால் அவனைப் பலமாக ஓங்கி அடித்தான். ஆனால் வேலன் தன் கையில் இருந்த கடப்பாறையால் அந்த அடியைத் தடுத்து விட்டபடியால், அவன் தலை தப்பியது. இந்தச் சந்தடியைக் கேட்ட ஊரார் எல்லோரும் அவர்களைச் சுற்றிக் கொண்டார்கள். வீரப்பன் வீராவேசங் கொண்டு, வெறி நாயைப் போல குதி குதித்துக் கொண்டு மறுபடியும் தன் தடியால் அடிக்க ஓங்கினான். ஒட்டர் எல்லோரும் அவர்கள் கைகளிலிருந்த கடப்பாறைகளை அவன் நெஞ்சிக்கருகிலே குறிபிட்டு "வீரப்பா அந்தத் தடியைக் கீழே போடு. இல்லாவிட்டால், குத்திவிடுவோம்! அதற்குப்பின், எங்கள் கையிலுள்ள கருவிகளால் இங்கேயே ஒரு குழியைத் தோண்டி உன்னையும் உன் நாயையும் அதிலே புதைத்து விட்டு நாங்கள் போய் விடுவோம்! ஜாக்கிரதை" என்று எச்சரித்தார்கள்.

வீரப்பனுக்கு ஒருவரும் உதவி செய்யவில்லை; உள்ளே இருந்த அவன் பெண்டாட்டி ஓடிவந்து ஒட்டர்களின் காலில் விழுந்து "என் பதியை அடிக்காதீர்கள்" என்று வேண்டினாள். ஒட்டர்கள் போய்விட்டார்கள். வீரப்பன் வீட்டிற்குள்ளே நுழைந்து "நாயை அடித்த வேலன்மேல் புகார் செய்து தண்டனை வாங்கிக்கொடுப்

பேன்" என்று கூவி வழக்கு மன்றத்தில் பிரியாது தாக்கல் செய்துவிட்டான்.

வழக்கை விசாரணை செய்ய நீதிபதி வீரமங்கலத்தில் முகாம் போட்டார். ஒட்டர்கள் பயந்தார்கள். வேலன் "நியாயம் நம்மிடம் இருக்கிறது. பயம் எதற்கு?" என்று தைரியமாக இருந்தான். சிலர் அவனை ஏளனம் செய்தார்கள். "அப்படிச் சிறைவாசம் கிடைத்தால் கிடைக்கட்டும். இந்த குழிவெட்டும் தொழிலை அங்கேயும் செய்து அவர்கள் போடும் கஞ்சியை ருசி பார்த்து வருவேன், ஆகட்டும்! இதனால் பெரும் பாக்கியமுள்ள வாழ்க்கை கெட்டது ஒன்றுமில்லை!" என்றான் வேலன்.



ஊர்சாவடிக்கு நீதிபதி வந்தார்; வேலனைப் பார்த்து "நீ நாயைக் குத்தினது நிஜமா?" என்று கேட்டார். வேலன் "ஆம், சுவாமி" என்றான்.

"வாயில்லாத ஜீவனை ஏன் அடித்தாய்? வீரப்பன் இந்த நாயை நூறு ரூபாய் கொடுத்து வாங்கினாராம். அப்படிப்பட்ட நாயை நீ சாகடிக்கத் துணிந்தாயல்லவா? என்று கேட்டார்.

வேலன், "பிரபுவே, கவனிக்க வேண்டும்! அந்த நாயை நான் காரணமில்லாமல் குத்தவில்லை. என் மேல் பாய்ந்து கடிக்கமுயன்ற போது, எனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள நாயை கடப்பாறையால் தடுத்தது உண்மைதான்" என்றான்.


நீதிபதி கூப்பிடுவதற்கு முன்பாகவே வீரப்பன் பாய்ந்து வந்து "இது முற்றிலும் பொய். தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுபவன் கடப்பாறையைக் கூர் புறமாகவே நாய்க்கு எதிரில் தடுக்க வேண்டுமா? கூரில்லா பக்கம் திருப்பி தடுக்கப்படாதா? அசனல் நாய்க்கு காயம் படாமல் இருக்கும் அல்லவா?" என்றான்.

அதைக் கேட்ட வேலன் சிரித்துக்கொண்டே 'பிரபு, இவர் நாய், என்னை வாயால் கடிக்க வந்ததே தவிர, வாலால் கடிக்க வரவில்லை. அது வாய்க்குப் பதிலாக வாலாலேயே கடிக்கப் பாய்ந்திருந்தால் நானும் என் கடப்பாறையை திருப்பிக் காட்டியே நாயைத் தடுத்து என் உயிரைக் காப்பாற்றிக் கொண்டிருப்பேன்!'' என்று கூறினான்.

வேலன் அளித்த நகைச்சுவை விடையைக் கேட்ட நீதிபதி சிரிக்கத் தொடங்கினார் கச்சேரியில் வந்திருந்த ஜனங்கள் எல்லோரும் சிரிக்கத் தொடங்கினார்கள். நகைக்காமல் இருந்தது வீரப்பன் ஒருவன் தான்!

நீதிபதி வேலன் அளித்த தெளிவான பதிலைக் கேட்டு ''வீரப்பா, நீ சொல்வது கொஞ்சமேனும் ஒழுங்குள்ளதாய் காணப்படவில்லை. உயிருக்கே ஆபத்து வரும்போது கடப் பாறையைத் திருப்பி வைத்தே தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்று ஒருவரும் யோசனைச் செய்து கொண்டிருக்க மாட்டார்கள். அப்படி வேலன் ஆலோசித்துக் கொண்டிருந்திருந்தால் உன் நாய் வேலனைக் கொன்று விட்டிருக்கும். இனிமேலாகிலும் நீ உன் நாயை விட்டு விடாமல் ஓர் திடமான சங்கிலியினால் அதைக் கட்டி வைக்க வேண்டும்'' என்று கட்டளையிட்டார்.

"வேலா, உனக்கு விடுதலை கொடுத்தேன். நீ போகலாம்" என்றார் நீதிபதி. முகம் மலர வேலனும், முகம் சுருங்க வீரப்பனும் தம் தம் இடங்களுக்குப் போனார்கள். ஊரில் இருப்பவர்கள் எல்லோரும் அந்த நாய்பிசாசு ஒழிந்தது என்றும் வீரப்பன் அகங்காரமும் அடங்கினது என்றும், மிகவும் மகிழ்ச்சி யடைந்தார்கள்.






பூர்வகாலத்தில் தங்கவேல் செட்டியார் என்ற ஓர் பெரிய சீமான் இருந்தார். செட்டியாருக்கு இருக்கும் செல்வம் எவ்வளவு என்று அவரே அறியார். அவ்வளவு செல்வத்தில் மூழ்கி இருந்தும் எக்காரணத்தைக் கொண்டோ அவர் மனதிற்கு திருப்தி என்பதில்லாமலிருந்தது.

ஆகையால் தஙகவேல செட்டியார் "எனக்கு இவ்வுலகில் எல்லாவித ஸௌக்யங்களும் இருக்கின்றன. குறைவற்ற செல்வத்தினால் என்ன பயன்? சந்தோஷம், மனச்சாந்தம், இல்லாதவாழ்வு எதற்கு?" என்ற விசனத்தினாலேயே உணவு, உறக்கமின்றி, அவர் உடல் மெலிந்துபோய்விட்டது.

இப்படியிருக்க செட்டியார் ஓர் இரவு ஒரு கனவு கண்டார். அதில் ஒரு கிழவி தென்பட்டு "ஏ! செட்டியாரே, இறைவன் உனக்கு எல்லாவித செல்வத்தையும் கொடுத்தும் ஏன் கவலைப்படுகிறாய்? இங்கிருந்து சரியாக நாற்பது காதம் தூரத்தில் கைலைமலை இருக்கிறது. அம்மலைமேல் இரத்தின பூங்காவில் தங்கக்கோட்டை ஒன்றிருக்கிறது. அதற்குக் காவலாட்கள் இருவர் இருக்கிறார்கள். அவர்களை நீ திருப்தி செய்ய முடிந்தால் அவர்கள் உன்னைப் பற்றித் தேவதூதனுக்கு சிபார்சு செய்து, ஓர் விலையுயர்ந்த பெட்டியை வாங்கிக் கொடுப்பார்கள். அதைக் கொண்டுவந்து உன்னிடம் வைத்துக் கொண்டால் உன்னைப் புண்படுத்திக்கொண்டுவந்த அதிருப்தி, மாயமாகி மனம் குளிர்ச்சியடையும்" என்று சொல்லி மறைந்தாள்.


கனவை நம்புவது அசட்டுத்தனம் என்று செட்டியார் நினைத்தார். மறுநாளும் அதே கிழவி கனவில் வந்து "ஏன், செட்டி

டி. எ. ஆனந்தன், சித்தூர்



யாரே, எழுந்து உடனே கைலை மலைக்குப் போ. ஆனால் வெற்றுக் கைகளுடன் போகாதே! தங்கக் கோட்டையின் காவலர்கள் செல்வம் உள்ளவரை மட்டுமே கிட்ட சேர்ப்பார்கள். ஆகையால் உன் செல்வத்திலுள்ள ஜீவனையும் சேர்த்து அவர்களுக்குக் காணிக்கையாகக் கொடுததால் அவர்கள் சந்தோஷமடைந்து உதவி செய்வார்கள்" என்று புத்தி கூறி மாயமானாள். கிழவி மூன்றாம் இரவும் செட்டியாரின் கனவில் தோனறி கைலை மலைக்குப் போவென்று சொன்னாள். இனிமேல் சும்மா இருக்கலாகாது என்று செட்டியார் மறுநாள் காலையில் "அந்த கைலையமலையின் மேல் உள்ள பெட்டியைக் கொண்டு வர முடிந்தவர்களுக்குப் பெரிய வெகுமதி கொடுப்பேன்" என்று விளம்பரம் செய்தார். பல நாட்களாகியும் ஒருவரும் வரவில்லை


ஒருநாள் ஒரு பிச்சைக்காரன் செட்டியாரைக் கண்டு க்ஷேம லாபங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்து இடையில் "நான் அந்தப் பெட்டியைக் கொண்டு வரும் வழி காட்டுகிறேன்" என்றான். அதற்குத் தங்கவேல் செட்டியார் மிகவும் சந்தோஷித்தார். தன் செல்வத்தில் ஜீவன் எனப்படும் மணி, மாணிக்கங்களை பொறுக்கி எடுத்து, நூறு பெரிய பைகளில் வெள்ளி, தங்கக்கட்டிகளை நிரப்பி, நூறு யானைகள் மேல் ஏற்றி, அவ்வளவு பணத்தையும் காப்பாற்றுவதற்கு யானைகளைச் சுற்றிலும் குதிரை வீரர்களை ஏற்பாடு செய்தார். அந்தப் பரிவாரத்திற்கெல்லாம் ஆறு மாதங்களுக்குச் சரியான உணவு பொருள்களைச் சேர்த்து அவைகளைச சுமந்து வர தகுந்த ஒட்டகங்களை ஏற்பாடு செய்து, பஞ்ச கல்யாணி குதிரைகள் கட்டிய முத்துத் தேரில் தான் ஏறிக் கொண்டு, செட்டியார் சிறந்த வைபவத்துடன் புறப்பட்டார்.



செட்டியாரும், சிப்பந்திகளும் காடு மேடுகள் கடந்து மூன்று மாதங்களுக்குப் பிறகு ஓர் பெரிய சமவெளியை அடைந்தனர். அதற்கு எதிரில் ஒரு அபூர்வமான நந்தவனம் காட்சி அளித்தது. அந்தப் பிச்சைக்காரத் தோழன் செட்டியாரைப் பார்த்து "தாங்கள் இங்கேயே சற்றுத் தங்குங்கள். இதோ வருகிறேன்" என்று சொல்லிச் சென்று விட்டான்.

போனவன் வரவே இல்லை. வருவது போலவும் தெரியவில்லை. அவர் ஒன்றும் தோன்றாமல் அன்று இரவு இருளில் அங்கிருந்த ஓர் மரத்தின்மீது ஏறி அதனுடைய கிளைகளினிடையில் உட்கார்ந்து கொண்டார். பொழுது விடிந்தது. செட்டியார் தூக்கம் தெளிந்து பார்க்கையில் சூரியவெளிச்சம் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அவர் கண்களுக்கு எந்தப் பக்கம் பார்த்தாலும் தகதக வென்று பிரகாசித்துக் கொண்டிருந்தன. எதிரொளி பரவும் அவ்விடம், செட்டியாருக்குக் கண்கொண்டு பார்க்க முடியாமல் தங்க மயமாக காணப்பட்டது. செட்டியார் உட்கார்ந்திருந்த மரம் தங்கமரம். இலைகள் வெள்ளி. அதன் காய்களும் பூக்களும் முறையே இரத்தினங்கள், மாணிக்கங்கள். அவை களைப் பார்த்ததும் அவர் பிரமித்து "என் ஐசுவரியம் முழுவதும் சேர்ந்தாலும் இந்த மரத்தின் ஓர் காய் விலைக்குச் சமமாகாதே! என் செல்வமெல்லாம் எவ்வளவு? நானும் ஓர் சீமான் என்று சொல்லுவது வெட்கக்கேடு. ஐயோ! இவ்வளவு கஷ்டத்துடன் நான் எவ்வளவோ பெருமையுடன் கொண்டுவந்த காணிக்கைகளை இங்கிருக்கும் காவலர்கள் கண்ணுற்றேனும் பார்ப்பது பொய்" என்று மனதில் ஆராட்டம் கொண்டார்.

தங்கவேல் செட்டியார் கீழிறங்கி நடக்கத் தொடங்கினர். எவ்வளவு தூரம் நடந்தாலும் பாதை




முற்றிலும் தங்கநீர் மயமாகவே இருந்தது. கண்குளிர அத்தகைய காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து எதிரிலுள்ள தங்கக் கோட்டையை அடைந்தார். அதனுடைய தலைவாயில், ஆணி, முத்துக்களால் இழைக்கப்பட்டு விரிவாகத் திறந்திருந்தது. செட்டியார் உள்ளே நுழைந்தார். அங்கே ஓர் சிம்மாசனத்தில் ஓர் திவ்விய புருஷன் வீற்றிருந்ததைக் கண்டார். அவர் மிகவும் அன்புடன் செட்டியாரை வரவேற்று, "செட்டியாரே, நான் உமது பிரியமுள்ள நேசன்தான்! அஞ்சாமல் அருகே வாரும். நீர் விரும்பிய தெய்வப் பெட்டி இங்கே இருக்கிறது. என் காவலர்கள் உம்மை மெச்சும்படி செய்ய, உன் செல்வத்தின் சாரத்தைப் பிழிந்தெடுத்துக் கொண்டு வந்தாயல்லவா" என்றார். "இந்த விஷயங்கள் அவருக்கு எப்படித் தெரிந்தது?" என்று செட்டியார் ஆச்சரியத்துடன் நிற்கையில், அந்த தேவதூதர் ஓர் சேவகனை அழைத்து "நம் கோட்டையிலுள்ள எல்லா அறைகளையும் செட்டியாருக்குக் காண்பி" என்று கட்டளையிட்டார்

சேவகன் செட்டியாரைக் கோட்டையிலுள்ள அறைகள் எல்லாவற்றையும் காண்பித்தான். அறைகளின் சுவர்களெல்லாம் வெள்ளி! அவைகளின் ஜன்னல்களெல்லாம் நவரத்னங்களால் அமைக்கப் பட்டிருப்பதைக் கண்டார். அறைகளின் எல்லா மூலைகளிலும் தங்கக்கட்டிகள் குவிக்கப் பட்டிருந்தன. நடப்பவர்கள் எல்லோரும் அந்த தங்கப் பாளங்களின் மீதே நடக்க வேண்டும். சேவகன் கடைசியில் ஒரு அறையின் முன் நின்று "ஐயா, தெய்வப் பெட்டி இருக்குமிடம் இதுதான்!" என்றான். அதைக் கேட்டதும் செட்டியார் மெய் மறந்து மகிழ்ச்சி அடைந்தார்.

தெய்வப் பெட்டி விசித்திரமான வேலைப்பாடுள்ள பெட்டி. அதை

ஐம்பதுவாலிபர்களால் கூட தூக்க முடியாததை செட்டிமார் அதைக் கண்டு என்ன செய்வதென்று தெரியாமல் முழித்துக் கொண்டிருக்கும்போது, அங்கு தேவ தூதன் தோன்றி "செட்டியாரே, தாங்கள் தேடிவந்த தெய்வப் பெட்டி இதுதான. இது எங்கிருந்தாலும் அங்கே திருப்தியும் சாந்தமும் நிரம்பியிருக்கும். தாங்கள் இதைக் கொண்டு போகலாம். அதன் மூலமாக மனச் சாந்தியை அடைவீராக. ஆனல் ஒரு விஷயம் மட்டும் மறக்கக்கூடாது. இதை உமது மாளிகையில் கதவுகளையும், ஜன்னல்களையும், மூடிக்கொண்டுதான் இதன் மூடியைத் திறக்க வேண்டும்," என்று சொன்னன்.

செட்டியார் தான் கொண்டுவந்த காணிக்கைகளை அவனிடம் கொடுத்துவிட்டு விடை பெற்றுக் கொண்டார். வழியில் தன்னுடன் வந்த பிச்சைக்காரத் தோழன் எதிரில் வந்து "ஏனய்யா செட்டியாரே! ஏன் இவ்வளவு அவசரம்! நான் திரும்பி வரும்வரையிலும் பொருத்துக்கொள்ள முடியவில்லையா? மனிதனுக்கு இவ்வளவு ஆத்திரம் என்றைக்கும் ஆபத்தைக் கொடுக்கும்" என்று எச்சரிக்கை செய்து மறைந்தான்.




சாந்தமும் திருப்தியும் அளிக்கும் அந்தத் தெய்வப் பெட்டி தனக்கு மிக சுலபமாகக் கிடைத்ததென்று மிகவும் சந்தோஷத்துடன் செட்டியார் ஜாக்கிரதையுடன் பிரயாணம் செய்துக் கொண்டுவந்தார். அதைவிட்டு அரைக்கணமும் பிரியார்.

பரிவாரத்துடன் செட்டியார், வீட்டுப் பக்கம் திரும்பி இரண்டு மாதங்களும், இருபது நாட்களும் ஆயிற்று. இனி பத்து நாட்களில் வீடு சேரப் போகிறர். பெட்டிக்குள் இருப்பதைப் பார்க்கவேண்டுமென்று இதுவரையிலும் அடக்கி வைத்திருந்த ஆவல் பிடிபடாமல் போயிற்று. ஒரு நாள் சுற்றுமுள்ளவர்கள் எல்லோரும் நல்ல

தூக்கத்தில் மூழ்கி இருக்கும் சமயம், செட்டியார் ஒருவரும் அறியாமல் பெட்டிக்குப் போட்டிருந்த பூட்டுகள் ஐம்பதையும் திறந்து விட்டார். அந்தப் பெரிய பெட்டிக்குள் ஓர் சிறிய பெட்டி இருந்தது. அதற்குள் இன்னொன்று இருந்தது. அதன் மூடியைத் திறக்கையில் உள்ளே மற்றொன்று இருந்தது. இப்படியே ஒன்றிற்குள் ஒன்றாக மொத்தம் நூற்றுப்பதினாறு பெட்டிகள் இருந்தன. எல்லாவற்றிக்கும் கடைசியில் இருந்த பெட்டிக்குள் ஓர் சிறிய கூண்டு ஒன்று காணப்பட்டது அதில் இண்டு பறவைகள் உல்லாசமாகப் பறந்துகொண்டிருந்தன. அப்பறவைகளின் ஒவ்வொன்றின் கால்களிலும் ஒவ்வொரு தங்கப்பெட்டி காணப்பட்டது. அவைகளின் மூடிகளை திறந்ததும் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு அற்புத ஒளி வெளிக்கிளம்பி உடனே பறந்து ஆகாயத்தில் சேர்ந்தது. அவ்வொளிகள் பறந்ததும் அப்பறவைகள் இரண்டும் தரையில் விழுந்து விட்டன.

இவைதான் சாந்தம், திருப்தி எனப்படும் பறவைகள். ஆத்திரப்பட்டுச் செட்டியார் செய்த குற்றத்தினால் இன்று உலகத்திற்குக் கெடுதி நேர்ந்தது. தேவதூதன் சொன்னபடிக் கேட்டு, இன்னொரு பத்து நாட்கள் மட்டும் செட்டியார் அவசரப்படாமல் இருந்திருந்தால், செட்டியாருக்கும் நமக்கும் நல்லது உண்டாகி இருக்கலாம். ஆனால் அப்பறவைகளின் உயிர்கள் பறந்தோடிவிட்டதினால், உலகம் முற்றிலும் சாந்தம், திருப்தி என்பது இல்லாமலே போயிற்று. பறந்துபோன அப்பறவைகளின் உயிர்களை எப்பாடுபட்டேனும் மறுபடியும் உலகத்திற்குக் கொண்டுவந்து உபகாரம் செய்யும் பொருட்டு இமயமலையில் மகரிஷிகள் இன்றும் தவம் செய்து கொண்டு இருக்கின்றார்கள்.







ஒரு ஊரில் ஓர் சவுக்கார் இருந்தார். ஒரு நாள் அவர் தன் நான்கு பிள்ளைகளையும் கூப்பிட்டு "பிள்ளைகளே, பணம் சம்பாதிப்பதற்கு எவ்வழி சிறந்தது?" என்று கேட்டார். முதல் மூவரும் தங்களுக்குத் தெரிந்த யோசனைகளைச் சொன்னார்கள். நான்காம் பிள்ளை சிரிபாலன் என்பவன் "எனக்கு என்ன கவலை? நான் ஒரு மகாராஜன் ஆகப்போகிறேன். அரசாட்சி புரியப் போகிறேன்" என்றான். வீண் டம்பம் நிறைந்த அவ்வார்த்தைகளைக் கேட்ட பிதா அவனை வீட்டிலிருந்து விரட்டினார்.

சிரிபாலன் நவத்வீபம் என்ற ஊரைச் சேர்ந்து அங்கே ஒரு குருவை நாடினான். அவ்வாசிரியரிடம், இரத்தினமஞ்சரி என்கிற ஓர் அரசகுமாரியும் அவளுடன் மற்றொரு மந்திரிகுமாரனும் வித்யாப்பியாசம் செய்துகொண்டு இருந்தார்கள்.

இரத்தினமஞ்சரிக்கு மந்திரிகுமாரனிடத்தில் பிரேமை உண்டு. ஆனால் மந்திரிகுமாரன் இஷ்டமில்லாமல், ஏதோ சாக்கிட்டு விவாகத்தைத் தள்ளிவைத்துக் கொண்டே காலம் கழித்தான். ஒரு நாள் அவள் செய்த தொந்திரவைப் பொறுக்கமுடியாமல், தன் நண்பன் சிரிபாலனைக் கண்டு "நண்பா, நீ என் ஆடைஆபரணங்களைப் பூண்டு ராஜகுமாரியுடன் ஓடிவிடு" என்று கேட்டுக்கொண்டான்.

சிரிபாலன் "சரி!" என்று உடனே தன் குருதேவனைக் கண்டு "சுவாமி, நான் ராஜகுமாரியைத் திருமணம் செய்துகொள்ள நினைத்திருப்பதால் இன்று இரவே புறப்படுகிறேன். விடை தாரும்" என்று பணிந்து வணங்கிக் கேட்டுக்கொண்டான். அவனுடைய கபடமற்ற குணத்திற்கு ஆசிரியர் இரக்கமடைந்து, அவனுக்கு

பி. என். ஜகதீசன், காஞ்சீபுரம்




நல்லறிவு அருளவேண்டுமென்று நாமகளை வேண்ட, அவ்வம்மையார் தோன்றி சிரிபாலனின் வாயில் மந்திர ஜலத்தை விட்டாள். அந்த க்ஷணத்திலிருந்து சிரிபாலன் அபாரமான அறிவுள்ளவனானான்.

இரவு காரிருள். ஆகையால் இரத்தின மஞ்சரி தன்னுடன் வருபவன் மந்திரிகுமாரன் என்றே நினைத்தாள். பொழுது விடிந்ததும் அவள் சிரிபாலனைக் கண்டு இத்தகைய “முட்டாளை’ பின்பற்றியதற்குத் தன்னை நொந்துகொண்டு அவனுடன் பேசாமல் பின்தொடர்ந்தாள். அவ்விருவரும் அமராவதி பட்டணம் அடைந்தனர். அந்த நகரில் ஓர் மாளிகையில் இருவரும் வசித்து வந்தனர். அந்த நாட்டு அரசன் சிரிபாலனின் கூர்மையான அறிவைப் பற்றிக் கேட்டு, அவனைத் தன் மந்திரியாக அமைத்துக்கொண்டான். சிரிபாலன் எல்லோரும் தன்னை மிகவும் பாராட்டும்படி நடந்து வந்தான். இரத்தினமஞ்சரி அவைகளை ஒன்றையும் நம்பவில்லை. அவள் தன் கணவனிடம் பேசாமலே இருந்து வந்தாள்.

இரத்தினமஞ்சரியின் இறுமாப்பு ராஜாவுக்குத் தெரிந்தது. நாடெங்கும் புகழ் பெற்ற நம் மந்திரிக்குத் தன் மனைவியைத் திருப்தி படுத்த முடியாததற்குக் காரணம் என்னவென்று மிகவும் ஆச்சரியப்பட்டார். ஒரு நாள் அரசனுக்கு நல்ல யோசனை உண்டாகி, சிரிபாலனைக் கண்டு ‘இன்று இரவு உங்கள் இல்லத்திற்கு விருந்துண்ண வர விருப்பம் கொண்டேன். எனக்கு உங்கள் மனைவியாரே சமைத்துப் பரிமாற வேண்டும்” என்றார்.

சிரிபாலன் அதற்கு இணங்கி அந்த சமாச்சாரத்தைத் தன் இல்லாளுக்குச் சொல்லி அனுப்பினான்.

மன்னன் தான் சொன்னபடி விருந்துண்ண, சிரிபாலனின்



வீட்டிற்கு வந்தான். இரத்தின மஞ்சரி பரிமாறிக்கொண்டிருக்கும் பொழுது இடையில் மூன்று தரம், மூன்று நிறம் உள்ள புடவைகளை உடுத்தி பரிமாறினாள்! அரசன் தனக்குப் பரிமாறியவர் மூன்று வெவ்வேறு பெண்கள் என்று நினைத்தான்! மந்திரியின் மனைவி செய்த தந்திரத்தை அறியவில்லை.

அரசன் மந்திரியை மறுபடியும் அழைத்து, "தங்கள் மனைவி வெகு நன்றாக சங்கீதம் பாடுவாள் என்று அறிந்தேன். இன்று மாலை நான் அரசியருடன் கோயிலைப் பார்க்க வருவேன். அவ்விடத்தில் தங்கள் பாரியாள் பாடவேண்டுமென்று விரும்புகிறேன்" என்றான்.

இந்தச் சமாச்சாரத்தையும் சிரிபாலன் தன் மனைவிக்குச் சொல்லி அனுப்பினான்.

அதைக் கேட்ட அவள் "என் பர்த்தா மத்தளம் கொட்டினால், எனக்குப் பாடுவதற்கு ஆட்சேபணையில்லை" என்று சொல்லி அனுப்பினாள். சிரிபாலன் அதற்கு ஒப்புக்கொண்டான். அன்று மாலையில் ரத்தினமஞ்சரி அற்புதமாகப் பாடினாள். அதற்கு மிஞ்சிய திறமையுடன் சிரிபாலன் மத்தளம் அடித்தான். அப்போதுதான் இரத்தினமஞ்சரிக்குத் தன் புருஷன் பெரிய அறிஞரென்று நம்பிக்கை உண்டாகி அவருடன் பேசத் தொடங்கினாள்.

அறிவில் சிறந்த இவ்விருவரையும், அவ்வரசன் முத்துப் பல்லக்கில் ஏற்றி, அமராவதி பட்டினம் முழுவதும், அதிக ஆடம்பரத்துடன் ஊர்வலம் செய்து வைத்தான். நாட்டு மக்கள் எல்லோரும் மகிழ்ந்து கோலாகலம் செய்தனர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். இத்தம்பதிகளுக்கு அவ்வளவு அறிவூட்டிய பெருமான் குருதேவரும், நாமகளும் தோன்றி சிரிபாலனையும், இரத்தின மஞ்சரியையும் ஆசீர்வதித்தனர்.




ஒரு நாட்டில் ஒரு அரசன் இருந்தார். தான் கிழவன் ஆகியும் சிறுவர்போலவே ஒவ்வொரு ஆண்டும், தான் பிறந்த நாள் உற்சவம் செய்து கொள்வதற்கு மிகவும் இச்சைக் கொள்வது அவருடைய சுபாவம். மன்னன் தன் எழுபதாம் ஆண்டு பிறந்த நாளன்று, தன் குடி மக்கள் யாவரும் தங்கள் வழக்கமாகச் செய்யும் தொழில்களை விட்டு விடுமுறை நாளைபபோல் கொண்டாட வேண்டியதென்று உத்திரவு செய்தார்.

அரசனின் கட்டளைக்கிணங்கி பிரஜைகள் எல்லோரும் அன்று சந்தோஷமாகநாளைக் கழித்தனர். ஆனால் ஓர் சக்கிலியன் மட்டும் தன் தொழிலை அன்றும் விடாமல், வழக்கம்போல் செருப்புகளைத் தைத்துக் கொண்டு இருந்தான். ராஜசேவகர்கள் அவனை ராஜன் எதிரில் அழைத்துக்கொண்டு போய், "பிரபு! இவன் தங்கள் கட்டளைக் கிணங்கி இன்று விடுமுறை கொண்டாடாமல், வழக்கம் போல் கால் மிதிகளைத் தைத்துக் கொண்டிருந்தான். அரசன் கட்டளையை மீறிய குற்றத்தினால் இவனைத் தங்களிடம் அழைத்து வந்தோம்" என்றார்கள்.

அரசன் அந்தச் சக்கிலியைப் பார்த்து "என்னடா, மற்றவர்களைப்போல நீ இன்று விடுமுறை கொண்டாடுவதை விட்டு, வேலை செய்து கொண்டு இருந்தாயா?" என்று கேட்டார்.

"அரசே! வேலையை விட்டு விட்டால் இன்றைய தினத்தின் சோறு எப்படிவரும்? கை அசைந்தால் தான் வாயும் அசையும் என்கிற நிலைமையில் இருக்கிறேன். பிரபு" என்றான் சக்கிலிச் சின்னான்.

"இத்தனை நாள் சம்பாதித்ததிலிருந்து மிச்சம் செய்யவில்லையா?

என். விமலா, கோயம்புத்தூர்



அன்றைக்கன்றே சிலவழித்து விடுவாயா? நாளொன்றுக்கு உனக்கு எவ்வளவடா சம்பாதனை?" என்று கேட்டார், அரசர்.

"நாளொன்றுக்கு ஆறணா சம்பாதிககிறேன், சுவாமி" என்றான் சின்னான்.

"ஆறு அணாவா? இன்னும் என்ன? அரை அணாவிற்கு அரை உழக்கு அரிசி வரும் இந்த நாட்களில், உன் போன்றவனுக்கு நாளொன்றுக்கு இரண்டு அணாக்கள் போதுமே! மிச்சமான நான்கு அணாக்களை சேர்த்து வைக்காமல் என்ன செய்கிறாய்?" என்று கேட்டார் அரசர்.

"பாதியினால் கடன் அடைப்பேன்!
பாதியை நான் கடன் கொடுப்பேன்!"

என்று பாடினான். சின்னான் பாடிய பாட்டிற்கு பொருள் என்னவென்று அரசனுக்குத் தெரியவில்லை. "என்ன சொன்னாய்! இரண்டணாவுடன் கடன் அடைப்பாயா? ஆனால் கடன் கூட உனக்கு இருக்கிறதா? கடன் பட்டவனாய் இருந்தாயானால், நாளொன்றுக்கு நான்கு அணா வீதம் அக்கடனை ஏன் தீர்த்துக் கொள்ளலாகாது! அதிலிருந்து மற்றும் இரண்டணாக்களை எடுத்து வேறொருவனுக்கு கடன் கொடுப்பதேன்?" என்று கேட்டார். சின்னான், "மகாப் பிரபு, என் பிதா பிழைத்து இருக்கிறார். அவர் இப்போது மிகவும் முதுமை அடைந்து கஷ்டப்பட்டு காசு சம்பாதிக்க முடியாமல் இருக்கிறார். அப்பெரியார் எனக்காக எவ்வளவோ செலவழித்து என்னை வளர்த்து பெரியனாகச செய்தார். அவர் வளர்த்ததால் தான் நான் இன்று சம்பாதிக்கும் திறமையைப் பெற்றேன். ஆகையால் நான் சம்பாதித்ததிலிருந்து இரண்டணா அவருக்குக் கொடுத்து நான் பட்ட கடனை அடைத்து வருகிறேன். அதுதான் என் பாட்டின் முதல் அடி 'பாதியினால் கடன் அடைப்பேன்' என்பதின்



கருத்து. அரசன் அவனுடைய பெற்றோரிடம் காட்டும் அன்பிற்கு மகிழ்ந்து "சரி, 'பாதியை நான் கடன் கொடுப்பேன்' என்றாயே, யாருக்குக் கடன் கொடுக்கிறாய் சொல்!" என்றான். சின்னான், "சுவாமி! யாரோ அல்ல. அந்த இரண்டு அணாக்களும் என் பிள்ளைக்கே. நானும் என் தகப்பனார் போலவே முதுமை உற்று பலமற்றுப் போவது உண்மை. அத்தகைய பலஹீனனாக இருக்கும் காலத்தில் என பிள்ளை மட்டுமே சம்பாதித்து எனக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டும். இச்சமயத்தில் அவனை பணம் கொடுத்து பெரியோனாகச் செய்தால் என் முதுமை காலத்தில் அவன் என் கடனை அடைப்பான்" என்றான்.

அரசன் சபாஷ் என்று அவனை மெச்சிக்கொண்டு,

"பாதியினால் கடன் அடைப்பேன்!
பாதியை நான் கடன் கொடுப்பேன்!"

என்று பாடுவதற்குத் தொடங்கினார். அவருக்கு ஓர் வேடிக்கை செய்யத் தோன்றிற்று. "சின்னா, இந்தப் பாட்டின் பொருளை நீ ஒருவருக்கும் சொல்லாதே. நான் என் சபையிலுள்ளவர்களை எல்லோரையும் கூப்பிட்டு இவ்விரண்டு வரிகளையும் ஓர் விடுகதையைப் போலக் கொடுத்து 'அதனின் பொருளைச் சொல்லுங்கள்!' என்பேன்; பார்ப்போம் என்ன நடக்கிறதோ!" என்றார். "பிரபு! இந்த ரகசியத்தைப் பல காலம் ஒளித்து வைக்க என்னால் முடியாத காரியம். தாங்கள் ஏதோ ஒரு கடுவு வைத்தால் அதுவரையிலும் எப்படியோ மூச்சுப் பிடித்துக் கொண்டு வாயை மூடிக் கொண்டிருப்பேன்," என்றான், அந்தச் சின்னான்.

அப்படியானால் நீ நூறுதரம் என்னைத் தரிசனம் செய்யும் வரையிலும், இந்த ரகசியத்தை வெளியிடாதிருந்தால் போதும்' என்று கட்டளையிட்டார் மன்னர்.

சக்கிலியன் "அப்படியே, சுவாமி," என்றுச் சொல்லிச் சென்றான். அரசர் உடனே சபையைக் கூட்டி சபையோர்களுக்கு—

"பாதியில் நான் கடன் அடைப்பேன்!
பாதியை நான் கடன் கொடுப்பேன்!"

என்று பாடி, "இந்த விடுகதைக்கு விவரம் கூறுக,' என்றார். மந்திரி, சேனாதிபதி, கொத்தவால் முதலிய பெரிய உத்தியோகஸ்தர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு விழித்தார்கள். அரசன், "இவ்வளவுதானா, உங்களுடைய தெளிவு!" என்று ஏளனம் செய்தார். மந்திரியார் எழுந்து "அரசே! இன்று இரவு மட்டும் கழியட்டும் நாளை காலையில் சொல்கிறேன் என்றார். அரசன் 'சரி' என்று சபையோரை அனுப்பிவிட்டார்.

அரசனுக்கு, இந்த விடுகதையை யாரோ இன்று சொல்லி இருக்க வேண்டும். இன்று அரசனிடம் வந்தவர்கள் யார் யாரென்று விசாரித்து, சின்னான் என்கிற சக்கிலியன் வந்து போனதைத் தெரிந்து கொண்டு, அவன் செய்த குற்றத்திற்கு தண்டனை யில்லாமல் சந்தோஷமாகத் திரும்பிச் சென்றதையும் அறிந்தான், மந்திரி. உடனே சின்னானிடம் சென்று



"அடே, சின்னா! யாரடா, இந்த விடுகதையை அரசனுக்கு சொன்னது? நிஜத்தைச் சொல்லு," என்று அதட்டிக் கேட்டார்.

"நான் தான் சுவாமி," என்றான் சின்னான். "இதன் பொருள் நீ சொல்லடா! நீ எதைக் கேட்டாலும் கொடுக்கிறேன்" என்று வாக்களித்தார் அமைச்சர்.

"ஆனால், சுவாமி, எனக்கு நூறு வராகனகள் கொடுங்கள். உங்கள் பெயர் சொல்லிக் கொண்டு நானும் பிள்ளைகளும் பிழைத்துக் கொள்ளுவோம்," என்று சின்னான் கேட்டுக் கொண்டான்.

அவன் விருப்பம்போலவே மந்திரி அவனுக்கு நூறு வராகன்

கள்கொடுத்சார். அவன் அவைகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து கணக்கிட்டு தான் கொடுத்த விடுகதையின் பொருளை அவருக்கு விவரித்துச் சொல்லியனுப்பி விட்டான்.

மறுநாள் காலையில் ராஜசபையில், மந்திரி எழுந்து அரசன் சொன்ன விடுகதையின் பொருளை விளக்கினார். சபையோர்கள் எல்லோரும் அமைச்சரின் அறிவைக் கண்டு ஆச்சரியமடைநதனர். ஆனால் அரசன் மட்டும் அதிக கோபங்கொண்டு "உடனே அந்த சக்கிலியை இழுத்துவரவேண்டும்" என்று சேவகர்களை அனுப்பி, அவன் வந்தவுடன் "என்னடா, சின்னா நீ விடுகதையின ரகசியத்தை மந்திரியாருக்குச் சொன்னாயா?" என்று கேட்டார். "ஆம் சுவாமி!" என்று வினயத்துடன் சின்னான் சொனனான்.

"என் தரிசனம் நூறுதரம் செய்த பிறகே இந்த ரகசியத்தை வெளியிடுவேனென்று எனககு வாக்களித்து, ஏன் இப்படி மீறி நடந்தாய்?" எனறு அரசன் கர்ஜித்தார்.

"மகாப்பிரபூ! நூறுதரம் தங்களை தரிசித்த பிறகே அமைச்சருக்கு இநத ரகசியத்தைச் சொனனேன். இதற்கு மந்திரியார் அவர்களே சாட்சி. அவர் எதிரிலேயே நூறுதரம் தங்கள் உருவம் உள்ள நூறு பொன்களை தரிசனம் செய்து, அதன் பிறகே நான் அவருக்கு விடுகதையின் விஷயததை அறிவித்தேன்" என்று சின்னான் மிக்க வணக்கத்துடன் கூறினான். இதைக் கேட்ட வேந்தனுக்கு கோபம் எங்கேயோ போயிற்று. மிகவும் மகிழ்ந்து "சின்னா! நீ மிகவும் புத்திசாலி! உன் அறிவிற்கு மந்திரியார் கொடுத்த நூறு வராகன்கள் எவ்விதத்திலும் போதாது. இதோ நான் மற்றொரு நூறு வராகன்கள் கொடுக்கிறேன் எடுத்துச் செல்," என்று அரசர் அவனுககுப் பரிசளித்து அனுப்பி விட்டார்.



# மரங்கொத்தியின் மூக்கு நீளம்

# ஏன் தெரியுமா?



பூர்வகாலத்தில் ஒரு பொல்லாத துஷ்டக் கிழவி இருந்தாள் அவள் யாருக்கும் துன்பமே செய்து வந்தாள். யார் யார் எங்கெங்கு என்னென்ன பேசிக் கொண்டு இருப்பார்களோ, ஆங்காங்கு சுவர்களின் மறைவுகளில் நின்றிருந்து கேட்பதும், இங்குள்ள பேச்சை அங்கும், அங்குள்ள பேச்சை இங்குமாக கோள்மூட்டி, கலகம் வளர்ப்பதும், இல்லாத பொல்லாத கதைகளைச் சொல்லி சந்தோஷமாக வாழும் தம்பதிகளைப் பிரித்து வைப்பதும் அவளுடைய கொள்கையாக இருந்தது. மேலும் தன் தீக் கண்களால் ஒவ்வொருவரின் வீட்டை எட்டி எட்டிப் பார்ப்பதும் தன் சாண் அளவு நீண்ட மூக்கினால் ஒவ்வொரு பொருளையும் முகர்வதும, அவள் சுபாவம். இந்த துஷ்ட சேஷ்டைகளைக் கண்டு அவள் மூலமாக உலகிற்கே தீங்குவருமென்று எல்லோரும் கருதினார்கள்.

பராசக்தியான காளியம்மன் இவற்றைக் கண்டு, அந்த பாதகியைச் சிக்ஷை செய்ய நிச்சயித்து, உலகத்திற்கு மானிட உருவத்துடன் இறங்கிவந்து, ஓர் கனமான பையை அந்தக் கிழவிக்குக் கொடுத்து "பாட்டி, பாட்டி, உனக்கு ஓர் பெரிய பரிசு கொடுக்கிறேன். ஆனால் இந்தப் பையை மட்டும் நீ வீட்டிற்குப் போய்ச் சேரும் வரையிலும் அவிழ்த்துப் பார்க்கக் கூடாது,' என்று எச்சரிக்கை செய்து மறைந்தாள்.

ஓர் நாலு அடிகள் நடந்தாளோ இல்லையோ, கிழவிக்கு கைகள் அரிக்க ஆரம்பித்தது. அவளுடைய தீக்கண்கள் பைக்குள் இருக்கும் பொருள்களைப் பார்க்க வேண்டுமென்று விரிந்து நோக்கவும், ஜாண் நீளமுள்ள அவள் மூக்கு அந்த பைக்குள்ளே என்ன இருக்கிறதென்று மோப்பம் காணவும் முயன்றது. அவள்

வயிறு உப்ப ஆரம்பித்தது. இனி மேல் பொறுக்கவே முடியாது என்று ஓரிடத்தில் உட்கார்ந்து மெதுவாய் பையின் வாயை அவிழ்த்தாள்.

அவிழ்த்தவுடனே எப்பொழுது வெளிப்படலாம் என்று எதிர்ப் பார்த்துக் கொண்டிருந்த பற்பல ரகமுள்ள, எரும்பு, கொசு, தேள், பாம்பு, புழு, ஈ, நண்டு, நத்தை, அட்டை, மூட்டை, உண்ணி முதலிய நச்சுப் புழுக்கள் ஏராளமாக வெளியில் கிளம்பி வளைகளிலும் புற்றுகளிலும், துவாரங்களிலும புகுந்து ஓடியும், மரங்கள் மீது ஏறியும், காற்றில் பறந்தும் போய் விட்டன. இவைகளையெல்லாம் பார்த்து கிழவி நடுங்கி விட்டாள். அங்கு மிங்கும் ஓடி தன் கைகளுக்கு அகப்பட்ட இரண்டொரு கிருமிகளைப் பிடித்து அந்தப் பையில் விட்டாள்.

மிகுதியான புழுக்கள் அகப் படாமல் ஓடிப் போயின.

அச்சமயத்தில் காளியம்மன் அவள் எதிரில் தோன்றி "அடி பாதகி! சண்டாளி! நீ பூலோகத்தில் மானிட உருவத்தில் இருக்கத் தகாது. நான் உன் கையில் கொடுத்திருந்த பிராணிகளையும் கிருமிகளையும் எங்கே விட்டாய்? உன்மூலமாக உலக முற்றிலும் தீராத பிணிகள் உண்டாகிவிட்டது. அந்தப் புழுக்களில் ஒன்றையும் தவறாமல் பொருக்கிப் பிடித்து அந்தப் பையில் போடும் வரையிலும் நீ மரங்கொத்தி பறவையாக இவ்வுலகில் இருப்பாயாக!" என்று சபித்தாள்.

உடனே அந்தப் பாதகியான கிழவி மரங்கொத்தி பறவையாக மாறிவிட்டாள். அந்தப் பக்ஷி தன் ஜானுக்கு மிஞ்சிய அலகினால் 'டக் டக்' என்று மரங்களைக் கொத்தியும், குத்தியும் ஓடிவிட்ட விஷப் புழுக்களை தேடிப்பிடிக்க இன்றைக்கும் முயன்று கொண்டு இருக்கிறது.







## குறிப்புகள்

**இடமிருந்து வலம்**

1. யோகி.
3. திருமால்.
6. ஆம்.
8. மேன்மை தங்கிய.
9. விசிறி.
11. முக்கண்ணன்.
13. தடாகம்.
15. சந்திரன்.
17. முக்கனிகளுள் ஒன்று.
18. மாற்றம்
19. நயம்.



**மேலிருந்து கீழ்**

1. பத்து.
2. குதிரை.
4. கணவன்.
5. திருட்டுப் பெண்.
7. சுபம்.
9. பாகம்.
10. மிளகாய் அதிக—உள்ளது.
12. சௌகரியம்.
14. நட.
16. சந்தோஷத்தினால் உண்டாகுதல்.
17. கொலை.



# குழந்தைவளர்ப்பு

பெற்றோர்களுக்கு

## தாயை பூசித்தல்

பெரியோர்களுக்கு இருப்பது போலவே சிறுவர்களுக்கும் தங்களுடைய வாழ்க்கையில் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பல உள்ளன. குழந்தைகள் தம் தாயைப் பூசித்தல் மிகவும் முக்கியமான கடமையாகும். குழந்தையை வளர்ப்பதற்கு தாய் எத்தகைய பாடு படுகிறாள்!

உலகத்தில், தாய்க்குள்ள புனிதமான குணம் சொல்லி முடியாது. ஏனென்றால் — தாய் தன் குழந்தையின் நன்மைக்காக எல்லாவித சுகங்களையும் இழந்துவிடுகிறாள். குழந்தையின் நலமே அவளுக்கு ஆனந்தம். அவர்களின் நன்மை, தீமைகள் அவளைச் சேர்ந்தது. அல்லும் பகலும் தன் மனம் முழுவதையும் குழந்தைகளின் மீதே வைத்திருப்பாள். அவளுடைய அன்பு அளவு கடந்தது. தாயின் கடனை ஒரு காலமும் நம்மால் தீர்க்க முடியாது.

இக்காரணங்களை முன்னிட்டு, சிறுவர்கள் வளரும்போதே தம் தாயை சந்தோஷிக்கச் செய்ய முயலவேண்டும். அதனை பயன் படுத்திக் காட்டுவதற்கு முயற்சி செய்யவேண்டும். தாயின் கட்டளையைச் சிரமேற் கொண்டு நிறைவேற்ற வேண்டும். நிறைந்த பக்தி, அன்பு செலுத்தி நன்றி காட்டி, மரியாதையுடன் பணிகளைச் செய்வது அவர்களுடைய முதல் கடமை. இவ்வுலகில் தாயின் அன்பை விட வேறொன்றும் இல்லை. அதனால்தான் பட்டினத்தடிகள் :—

"ஐயிரண்டு திங்களா யங்கமெல்லாம் நொந்து பெற்றுப்,
பையல் என்ற போதே பரிந்து எடுத்துச் செய்ய
இருகை ஏந்திக் கனக முலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

என்று தன் தாய் மறைந்தபோது புலம்பினார். தாயை வணங்கி, தொழுவதால், முன்னேற்ற மடைந்த வீர சிவாஜியினுடைய கதையை நீங்கள் படித்திருப்பீர்கள் அல்லவா?

உங்கள் சகோதரி

## விநோத சதுரம்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | அ | | | | | |
| 2. | | ம் | | | | |
| 3. | | | பு | | | |
| 4. | | | | வி | | |
| 5. | | | | | மா | |
| 6. | | | | | | மா |

இந்த சதுரத்தை, கீழ்க் கொடுத்திருக்கும் குறிப்புகளைக் கொண்டு வார்த்தைகளைப் பூர்த்தி செய்யவும்.

1. காரியாலயம்.
2. திருக்குடந்தை.
3. இதிலிருந்து ; வாசனைத் தயிலம் வடிக்கிறார்கள்,
4. செருப்பு தைப்பவர்.
5. விலையுயர்ந்த ஹாரம்.
6. ஸ்ரீ கிருஷ்ணனின் மனைவி.

---

## எப்படித் தாண்டுவார்கள்!

தாய், தந்தை, இரு பிள்ளைகள் உள்ள ஒரு குடும்பம், ஆறு ஒன்றினைக் கடக்க வேண்டும்.

அவர்களில், தாய்; தந்தை இருவரும் தனித் தனியே 160 பவுண்டுகள் எடை இருந்தனர்.

பிள்ளைகளில், அண்ணனும், தம்பியும் தனித் தனியே 80 பவுண்டுகள் எடை இருந்தனர்.

ஆற்றைக் கடக்க, 160 பவுண்டு எடையை மாத்திரம் ஏற்றிச் செல்லக் கூடிய படகு ஒன்று இருந்தது.

அவர்கள் எங்கனம் ஆற்றைக் கடந்திருப்பார்கள்?

விடை தெரியாவிட்டால் 55-ம் பக்கம் பார்க்கவும்




## பூட்டிய பெட்டியிலிருந்து வெளியே வருவது:

உன்னை ஓர் பெரிய டிரங்கு பெட்டியில் போட்டு மூடி வெளியே நல்ல பூட்டு போடுவார்கள். போட்ட பூட்டு போட்டது போலவே இருக்கும். ஆனால் நீ மட்டும் வெளியே வந்து விடுவாய் இதெப்படி?


சபைக்கு வருவதற்கு முன் உன்னுடன் நீ அடங்கும் அளவுள்ள பெட்டியைக் கொண்டு வர வேண்டும். அந்தப் பெட்டியைக் குறித்து கவனிக்க வேண்டியது— அதன் மேல் மூடிக்கு உள்ள தாள் வில்லைக்கு இரண்டு திருகு ஆணிகள் நுழைக்கப் பட்டு மூடியின் உட்பக்கம் இரண்டு மறைகளால் உறுதியாகத் திருகி இருக்க வேண்டும். இந்த ஒரு விஷயம் மட்டும் நன்றாக இருந்தால் சபையோர்களில் யார் எப்படிப்பட்ட உறுதியான பெட்டியைக் கொண்டுவந்து கொடுத்தபோதிலும் இந்த ஜாலத்தை நிறை வேற்றிக் கொள்ளலாம். அடுத்த பக்கத்திலுள்ள படத்தைப் பார். 1. எண் காட்டும் துவாரங்களில் 2. எண்ணுடன் காட்டியது போன்ற திருகாணிகள் அமைக்கப்பட வேண்டும்.

இன்னொரு விஷயம். சபைக்கு வருவதற்கு முன் நீ பூட்ஸ் பேட்டுக் கொண்டு வரவேண்டும். ஒரு பூட்ஸின் குதிகால் வில்லை ஒரு பக்கத்தில் விலக்குவதற்கு அனுகூலமாக இருக்க வேண்டும். விலக்கும்போது அந்த வில்லைக்கும் பூட்ஸுக்கும் இடையிலே காலி ஏற்பட்டு, அதற்குள் ஓர் சன்ன குறடும், மற்றொரு சிறிய மறையைத் திருகும் ஸ்பானரும் ஒளிக்கப் பட்டிருக்க வேண்டும். குதிகால் வில்லை படத்தில் காட்டியவாறு ஓர் ஆணியால் பதிக்கப் பட்டு இருக்கும்.

முதல் முதலில் பெட்டியை சபையோரை நன்றாக சோதனை செய்

யச் சொல்லவும். பிறகு உன்னையும் பரீக்ஷிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவும். சபையோரைக் கண்டு "இதோ பாருங்கள், என்னை இந்த பெட்டிக்குள் வைத்து உங்கள் இஷ்டம்போல் பூட்டி சீல் போட்டு விடுங்கள். பின்னிட்டு நீங்களே இந்தப் பெட்டியை திரைக்குப்பின் வைத்துப் பாருங்கள். கொஞ்ச நேரத்திற்குள் உங்கள் கண் முன் இந்த பெட்டியுடன் எதிரில் நிற்பேன்" என்று சொல்லவும். அப்படியே அவர்கள் உன்னை பெட்டிக்குள் வைத்து திரைக்குப்பின் வைப்பார்கள்.


அப்போது மெதுவாக உன் பூட்ஸுக்குள் நீ ஒளித்துக்கொண்டுவந்த குறடை எடுத்து பூட்டு வில்லைக்கு உட்புறம் இருக்கும் மறைகளைக் கழற்றி அவைகளை உன் கோட்டுப் பையில் போட்டுக் கொள்ளவும். இப்பொழுது ஆதாரமற்ற அந்தப் பெட்டியின் மேல்மூடி, நீ கஷ்டமில்லாமல் வெளியே வருவதற்கு சுலபமாய் விடும். வெளிப்பட்டவுடன் நீ நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால், மறவாமல் பெட்டியை மூடி, அவ்வாணிகளை அவைகள் இருந்த இடத்தில் முன் இருந்ததைப் போல் பதித்து வைக்கவும். பெட்டியை மட்டும் தலைகீழாக வைக்காதே. சபையோரைக் கண்டு பெட்டியை மறுபடியும் சோதிக்கும்படிச் சொல். போட்ட பூட்டு அசையாமல் பெட்டியை ஒரு குறையுமில்லாமல் இருப்பதை கண்டு ஆச்சரியப்படுவார்கள். சபைக்கு வருவதற்கு முன்பு, இந்த ஜாலத்திற்கு வேண்டியவைகளை கவனமாகத் தயார் செய்துக்கொண்டு வரவேண்டும்.





[ஜாலவேடிக்கையைப் பற்றி விபரமாகத் தெரிந்து கொள்ள விரும்புவோர், நமது பத்திரிகையின் பெயரைக் குறிப்பிட்டு புரொபஸர் அவர்களுக்கு ஆங்கிலத்தில் எழுதலாம்.

அவர் விலாசம்:— புரொபஸர் P. C. சர்க்கார்
மெஜிசியன்,
போஸ்ட் பாக்ஸ் 7878, கல்கத்தா-12]

## கோலங்கள்



டி. சுப்புலக்ஷ்மி, ஜலகண்டபுரம்.



எஸ். ருக்மணி, திருச்சி.

# "நிலாப் பாட்டு"

ரா. விநாயகன் திருவனந்தபுரம்

★

அம்புலிமாமா, அம்புலிமாமா!
அம்புவி வியக்கும் அம்புலிமாமா,
வெம்புலி யன்ன வீரங் கொண்டாய்,
அம்புலிமாமா, அம்புலிமாமா!

தெம்பு தருவாய்; திறந்தருவாய்;
செம்பொருட்கவிகள் நீ தருவாய்;
அன்பு தருவாய்; அருள் தருவாய்;
அம்புலியே நீ புவி வருவாய்!

ஆசை கொண்டே அழைக்கின்றேன்;
அன்பில் நானே துவிர்க்கின்றேன்;
நேசம் தாளேன் நீ வாராய்,
நிதமும் இன்பம் நீ தாராய்!

'வெண்மதி' யான அம்புலியே,
வெண்மை யங்கே விற்போர் யார்?
'தண்மதி' யான அம்புலியே,
தண்மை அங்கே தருவோர் யார்?

'ஒண்மதி' யான அம்புலியே!
ஒளியை அங்கே கொடுப்போர் யார்?
உண்மையின் ஒளியாம் அம்புலியே
உன்னொளி எண்திசை திண்ணிடவே!

வட்டந் திருத்தச் செய்பவர் யார்?
வெட்டி உன்னைக்குறைப்போர் யார்?
சட்டமின்றி வானகத்தில்
அறுகாதுன்னைக் காப்போர் யார்?

## எப்படித் தாண்டுவார்கள்
## (விடை)

★

1. முதலில் அண்ணனும் தம்பியும் ஆற்றைக் கடந்து தம்பியை விட்டு விட்டு அண்ணன் திரும்பவேண்டும். 2. பிறகு தாய் படகை எடுத்துக் கொண்டு மறுகரையை அடைய வேண்டும். 3. அங்கே இருந்த தம்பி மறுகரைக்குத் திரும்ப வேண்டும். 4. பிறகு இரு சகோதரர்களும் எதிர் கரைக்குச் சென்று ஒருவர் அவ்விடம் தங்கி மற்றொருவர் திரும்பவேண்டும். 5. பிறகு தந்தை தனியே படகை எடுத்துக் கொண்டு அக்கரை சேர வேண்டும். அக்கரையிலுள்ள சகோதரன் இக்கரைக்கு வந்து இருவருமாகப் பெற்றோர் இருக்கும் இடத்திற்குத் திரும்பவேண்டும். ஆக அந்தப் படகு 9 தரம் இக்கரைக்கும் அக்கரைக்கும் திரிந்திருக்கிறது. எண்ணிப் பாருங்கள்.

## போட்டியின் விடை:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 த | 2 ப | சி | | 3 பூ | 4 ப | 5 தி |
| 6 ச | ரி | | 7 ம | | 8 தி | ரு |
| ம் | | 9 ப | ங் | 10 கா | | டி |
| | 11 ச | ங் | க | ர | ன் | |
| 12 வ | | 13 கு | ள | ம் | | 14 உ |
| 15 ச | 16 சி | | ம் | | 17 ப | லா |
| 18 தி | ரி | பு | | 19 ம | லி | வு |

51-ம் பக்கத்திலுள்ள

விநோத சதுரத்தின் விடை:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ஹு | வ | ல | க | ம் |
| கு | ம் | ப | கோ | ண | ம் |
| ரோ | ஜா | பு | ஷ் | ப | ம் |
| ச | க் | கி | லி | ய | ர் |
| ர | த் | தி | ன | மா | லை |
| ச | த் | தி | ய | பா | மா |




இந்தப் படத்திற்கு வர்ணம் தீட்டி நவம்பர் மாத இதழுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்

Controlling Editor : SRI CHAKRAPANI
Printed and Published by B. NAGI REDDI at the B. N. K. Press, Madras-1